761

# ஜகன்மோகினி

ஆசிரியை
வை.மு.கோதைநாயகி அம்மாள்

OFFICE OF THE REGISTRAR
9-FEB 1938

அடுத்த இதழி[l]

(15-வதாண்டு ஆரம்பம்
ஜனவரி 1938)

உங்கள் செல்வி
"மோகினி"
உங்களது ஆதரவைக் கோரி,
வெகு ஆவலுடன்

...ழ்க்கையின் நாதம் அல்லது வா[illegible]தியில்

என்னும்
மகோன்னத
மான நாவலில் தாங்
கிக் கொண்டு வரப்
போகிறாள். அவளை வர
வேற்கத் தயாராயிருங்கள்.

---

1938-வது
புது வருஷப் புது நாவல்

## உளுத்த இதயம்

உங்கள் உள்ளத்தை உருக்கி கண்ணீரைப் பெருக்கச் செய்யும் ...வாழ்க்கையின் சித்திரம் போன்ற அருமை ...நாவல் விலை அணா நான்கேதான். புது வருஷச் ...ன் சேர்த்து அனுப்பிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

1842

| டிசம்பர் 1937 | [ச]ந்திரமண்டலம் (முடிவு) | அணா 2 |
|---|---|---|



சந்திரகாந்தாவின் வெற்றிக்குப் பின்—

திருப்பூர் ஜுபிடர் பிக்சர்ஸாரின்

பராமரிப்பில்

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகியம்மாள் அவர்களின்

பேனா புதல்வி

# அனாதைப் பெண்

மதராஸ் மோஷன் பிக்சர்ஸ் கம்பைன் ஸ்டூடியோவில்

உருப்பெற்று

டைரெக்டர் ஆர். பிரகாஷ் அவர்களின்

அரிய முயற்சியால்

கூடிய சீக்கிரம்

வெள்ளித் திரைக்கு

தயாராகிறாள்.

## ஜுபிடர் பிக்சர்ஸ்,

திருப்பூர்.

761

ஸ்ரீராமஜெயம்

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து

—ஸ்ரீ வீரராகவ கவி.


| | | |
|---|---|---|
| மலர் 14 | ஈச்வர ௵ கார்த்திகை ௴<br>டிசம்பர் 1937 | இதழ் 12 |


183013

## திருப்பாவை

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கு மாய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேற் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போன்முகத்தான்
நாரா யணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.

# வெளிநாட்டுச் செய்திகள்

## ஜப்பானுக்கு வல்லரசுகள் பணிவு

ஸர்வதேச குடியேற்றத்தில் முன்னர் சீனர் அனுபவித்திருந்த ஆதிபத்ய அதிகாரங்கள் இனி தங்களுக்குத் தான் உண்டென்று பிரிட்டிஷ், பிரெஞ்சு, அமெரிக்க அதிகாரிகளுக்கு ஷாங்ஹேயிலுள்ள ஜப்பானிய தளபதி நோட்டீஸ் அனுப்பியதற்கு அவர்கள் இணங்கிவிட்டதாகத் தெரிகிறது.

## பிரான்ஸில் சர்வாதிகாரத்தை ஸ்தாபிக்க சதி

குடியரசு முறையைக் கவிழ்த்து, ஸர்வாதிகார சர்க்காரை ஏற்படுத்த ஒரு கோஷ்டியினர் சதி செய்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டு தீவிரமான சோதனைகள் நடைபெறுகின்றன.

## ஜர்மன் காலனிகளை திரும்பப் பெற முயற்சி

முந்திய யுத்தத்தில் இழந்த காலனிகளைத் திரும்பப்பெற வேண்டுவதற்கான ஏற்பாடுகளைத் தீவிரமாக நடத்தி வருகிறார்கள்.

## நோபல் சமாதானப் பரிசு

பிரிட்டனிலுள்ள ஸர்வதேச சங்க யூனியனில் நெருங்கி உழைத்து வரும், சமாதானத்துக்காக இடைவிடாமல் பிரசாரம் செய்பவருமான லார்ட் செஸிலுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

---

# உள்நாட்டுச் செய்திகள்

## அகில இந்திய காங்கிரஸ் மெம்பர்கள்

இந்த வருஷத்தில் பர்மா, எல்லைப்புறம் தவிர மற்ற மாகாணங்களின் தொகை 31,34,249. சென்ற வருஷத்தில் 6,36,131 பேர்களே சேர்க்கப்பட்டனர்.

## பாஞ்சாலத்தில்

1,28,855 பேர்கள் காங்கிரஸ் மெம்பர்களாகச் சேர்க்கப்பட்டனர். சென்ற வருஷத்தில் 28,000 தான்.

## தாவர சாஸ்திர வானில் சந்திரனின் மறைவு

பிரபல தாவர சாஸ்திரியான ஸர். ஜகதீச் சந்திர வசு தமது 80-வது வயதில் நவம்பர் 23-ம் தேதியன்று மாரடைப்பால் மரணமடைந்தார்.

## மதபோதனையை கட்டாயப் பாடமாக்கலாகாது

"இதுவரை சர்க்காரிடம் கிராண்டு பெற்றுவரும் மிஷனரி கல்வி ஸ்தாபனங்கள் யாவும், இனியும் கிராண்டு பெற்றுவர விரும்பினால், மதபோதனையை கட்டாய பாடமாக்கலாகாது; இஷ்டப் பாடமாக்கவேண்டும்" என்று எல்லைப்புறக் கல்வி மந்திரி சுற்றறிக்கை அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

## அஹிம்ஸா மூர்த்தியின் மற்றொரு வெற்றி

மகாத்மா அரசியல் கைதிகள், பந்தோபஸ்து கைதிகள் விடுதலை செய்வது சம்பந்தமாக வங்க கவர்னர், மந்திரிகளுடன் சம்பாஷித்ததன் பலனாக 1100 பந்தோபஸ்து கைதிகள் இப்பொழுது விடுதலையடைவதுடன், பாக்கியுள்ள 450 பேர்கள் கூடிய சீக்கிரம் விடுதலையடைவார்களென்று தெரிகிறது.

## உபசாரங்கள் கண்டிப்பாய்க் கூடாது

### சென்னை மந்திரிகள் தீர்மானம்

விளம்பர மந்திரி கீழ்க்கண்ட அறிக்கையை விடுத்திருக்கிறார் :—

ஸ்தல ஸ்தாபனங்களிடமிருந்து உபசாரப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளும் விஷயத்தை பிரதம மந்திரியும், இதர மந்திரிகளும் மீண்டும் ஆலோசனை செய்தனர். தங்களது சுற்றுப் பிரயாணங்களின்போது அத்தகைய உபசாரப்பத்திரங்கள் எதையும் கண்டிப்பாய் பெற்றுக் கொள்ளுவது இல்லையென, அவர்கள் தீர்மானித்து விட்டனர்.

தூது கோஷ்டியினர் தாராளமாக வந்து பார்க்கலாம்; விக்ஞாபனங்கள், மகஜர்களைச் சமர்ப்பித்துக்கொள்ளலாம். எந்த சமயத்திலும் ஸ்தல ஸ்தாபன மெம்பர்களையும், சேர்மனையும் மந்திரிகள் சந்தோஷமாய்ப் பார்ப்பார்கள். ஆனால் சம்பிரதாயமான வரவேற்புகளும், உபசாரப்பத்திரங்களும் கண்டிப்பாய் தவிர்க்கப்படவேண்டும்.

## நீல் சிலை அகற்றப்பட்டுவிட்டது

சென்னை விளம்பர மந்திரி கீழ்க்கண்ட அறிக்கையை விடுத்துள்ளார் :—

" அடிக்கடி பொதுஜனங்கள் கிளர்ச்சி செய்து அவர்கள் அபிப்பிராயத்தை தெரிவித்திருப்பதற்கிணங்க, மௌண்டு ரோடில் உள்ள ஜெனரல் நீல் சிலையை அது இப்போது இருக்குமிடத்தை விட்டு அகற்ற சர்க்கார் தீர்மானித்து விட்டனர். இந்த சிலை சென்னை கவர்ன்மெண்ட் மியூஸியம் காம்பவுண்டுக்குள் இருக்கும்."

சுமார் 8 வருஷங்களுக்கு முன் இந்த சிலையை அகற்றவேண்டி சென்னையில் சத்யாக்ரகம் நடந்ததும், இதில் திரளான காங்கிரஸ்காரர்கள் (ஆண், பெண்) ஈடுபட்டு சிறை சென்றதும் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கும்.

சமீபத்தில் சென்னை கார்ப்பரேஷனில் கூட இந்த சிலையை அகற்ற வேண்டுமென ஒரு தீர்மானம் நிறைவேறியது.

## ஸ்திரீகளும் விடுதலையும்

பெண் என்ற சிறுமை உணர்ச்சி எனக்குக் கிடையாது. ஆண் பெண் இருபாலாரும் சம கூட்டாளிகளாக இருக்கவேண்டுமென்றே நான் நம்புகிறேன். நம்முடைய உரிமைகளுக்காக நாம் ஆண்களுடன் சண்டை போடக்கூடாது. நம்மை நாமே அபிவிருத்தி செய்து கொண்டு, பொறுப்

பெற்றுக்கொள்ளக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டால் ஆண்கள் நமது உரிமைகளை மறுக்க முடியாது.

கிராமங்களின் சீர்கேடான நிலைமை மிகவும் பரிதாபகரமாயிருக்கிறது. அவைகளை முன்னேற்ற நாம் பாடு படவேண்டும். நமது திறமையைக் காட்டவேண்டும். நாட்டின் விடுதலைக்குப் பாடுபடுவதோடு மட்டுமல்லாமல், மனித வர்க்கத்தின் விடுதலைக்கும் நாம் போராடவேண்டும்''

—ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி. பண்டிட்

## "கவர்னர் பிரிவுபசார விருந்துகளில் காங்கிரஸ்காரர்கள் கலந்துகொள்ளலாமா?" என்பதற்கு காந்திஜியின் பதில்

கவர்னர்கள், அதிகாரிகள் முதலியவர்களுக்கு அளிக்கப்படும் பிரிவுபசார விருந்துகளில் காங்கிரஸ்காரர்கள் கலந்துகொள்ளலாமா? கூடாதா? என்பதைப்பற்றி தெளிவாக கட்டளை யளிக்கும்படி வங்க சட்டசபை காங்கிரஸ் கட்சி, கார்ப்பரேஷன் கட்சி பிரதம கொறடாவான ஸ்ரீ. நரேஷ் நாத் முகர்ஜி காந்திஜியைக் கேட்டார்.

அதற்கு காந்திஜி பின்வருமாறு எழுதுகிறார் :—

"காங்கிரஸ் தடை இருக்கும் வரையிலும், யார் அளித்தபோதிலும் சரி, எங்கு நடந்தாலும் சரி, கவர்னருக்கும், அதிகாரிகளுக்கும் நடத்தப்படும் பிரிவுபசார வைபவங்களில் காங்கிரஸ்காரர்கள் கலந்துகொள்ளக் கூடாதென்பதே என்னுடைய தெளிவான அபிப்பிராயம்.

நான் என்னுடைய விடுதியிலோ அல்லது அவர்களுடைய விடுதியிலோ கவர்னரையும், மந்திரிகளையும் சந்தித்தது விருந்து அல்லது உத்தியோக வைபவங்களல்ல. நான் காங்கிரஸில் நாலணா மெம்பர்கூட அல்ல. ஆதலால் இவ்விஷயமாக நான் செய்பவைகளைக் காங்கிரஸ்காரர்கள் செய்யக் கூடாது. ஆனால் நீங்கள் குறிப்பிட்ட உதாரணமும் இவ்விஷயத்தில் பொருந்தாது."

---

# சென்னை ஸ்டூடியோ செய்திகள்

---

## அநாதைப் பெண் (ஜுபிடர் பிக்சர்ஸ்)

நவம்பர் 15-ம் தேதியன்று சுபமான சமயம் சென்னை மோஷன் பிக்சர்ஸ் கம்பைன் ஸ்டூடியோவில் ஆடவரும், பெண்டிரும் கூடிக் குதூகலமாகவிருந்த சமயம் ஜுபிடர் பிக்சர்ஸாரின் 'அநாதைப் பெண்' என்ற படத்தின் படமெடுப்பு ஆரம்ப வைபவம் நடைபெற்றது. பிரமுகர்களில் டைரக்டர் ராஜா சாண்டோ, ஆர்ஸ் கொலம்பியாவைச் சேர்ந்த எம். கே. ஸ்ரீனிவாசன், ஆசிரியை ஸ்ரீமதி வை. மு. கோதை நாயகியம்மாள், ஜுபிடர் படத் தயாரிப்புக் கோஷ்டி, ஸ்டூடியோ நணுக்காளர்கள் முதலியோர் காணப்பட்டனர். குறித்த முகூர்த்த வேளையில் பூஜை நடத்தப்பட்டுச் சிற்றுண்டி வழங்கப்பட்டது. விருந்தாளிகள் மாலையிடப்பட்டுப் போடோவும் பிடிக்கப்பட்டது. ஜுபிடர்

பிக்சர்ஸின் ஜெயத்துக்கு அநேகர் ஆசி வார்த்தைகள் அனுப்பி வைத்திருந்தனர். டைரக்டர் பிரகாஷ் முதற் காட்சியை 'ஷூட்' செய்ய வாரம்பித்தார்.

* * * *

அனுதைப் பெண் ஷூட்டிங்கு நடந்து வருகிறதைப் பார்த்த சில அறிவாளிகளும், ப்ரமுகர்களும், சினிமா ரஸிகர்களும் நடிப்பின் திறனை வியந்து "எது தமிழ்ப் படத்திற்கும் உயிர் உண்டாகி அச்சுத்கன்யாவுக்கு நிகராக விருக்கும் போலிருக்கிறதே!" என்று கூறினார்களாம். அச்சுத் கன்யாவைப்போல ஒரு தமிழ்ப்படம் வரும் என்றதைக் கேட்டால் அதை விட ஆநந்தம் அதை எழுதிய ஆசிரியருக்கும், நடித்த நடிகர்களுக்கும், டைரெக்டருக்கும், முதலாளிகளுக்கும், ஸ்டுடியோக்காரர்களுக்கும் வேறு வேண்டுமா ?

## பக்த மீரா (சிந்தாமணி பிக்சர்ஸ்)

டைரக்டர் ஏ். வி. ராவ் அவர்கள் சென்ற ஒரு மாத காலமாய் தன் நடிக கோஷ்டிகளைக் கூட்டி ஒத்திகை நடத்தி வருகிறார். நடிகர்களெல்லோரும் அவரவரது பாத்திரங்களை உணர்ந்து மிகவும் இயற்கையாக நடிக்கின்றனர்.

டைரக்டர் ராவ் அல்ப விஷயங்களில் கூட கவனம் செலுத்தி வருகிறார். அக்காலத்திய நாகரிகத்தை ஆராய்ச்சி செய்து, அதற்கேற்ப உடைகளைத் தயாரிக்கும் காரியத்தை, அவ்விஷயத்தில் தேர்ந்த ஒரு நிபுணரிடம் ஒப்படைத்திருக்கிறார். அடுத்த வாரத்தில் அவர் புறக் காட்சிகளை எடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.

சங்கீத விஷயத்தை அக் கம்பெனியாரின் மியூசிக் டைரெக்டர்களான ஹரிகேசநல்லூர் சகோதரர்களைக் கலந்து கொண்டு சகல ஜனங்களும் ரஸிக்கும்படி சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு வர்ண மெட்டுகளையும் அர்த்த புஷ்டியுள்ள சாஹித்தியங்களையும் அமைத்திருக்கிறார். படத்தின் பின்னணி சங்கீதம் மிகச் சிறந்து விளங்கும்.

## ஸ்ரீ ராமாநுஜர்

நவம்பர் 19-ம் தேதி 1 மணிக்கு ஸ்ரீனிவாஸ் ஸினிடோனில், ஸ்ரீ ராமநுஜர் என்ற தமிழ்ப் பேசும் படத்தை சுகாதார மந்திரி டாக்டர் ராஜன் ஆரம்பித்து வைக்கையில் இந்தப் படத்தின் ஆரம்ப விழாவில் கலந்துகொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததற்கு சந்தோஷம் தெரிவித்துக் கொண்டார். ஸ்ரீ ராமாநுஜனின் சீர்திருத்த மனப்பான்மையைக் குறிப்பிட்டுப் பேசுகையில் தற்காலத்தில் ஸ்ரீ ராமானுஜனின் அவதாரமே காந்திஜியென்றும், தியாக உணர்ச்சியுள்ள பல நண்பர்கள் இப்படத்தில் கலந்து கொண்டிருப்பதால் படம் ஜீவசக்தியுள்ளதாய் இருக்குமென்று தான் நம்புவதாகவும் கூறினார்.

# சாகா வரம் வேண்டும்

---

நமது ஆசிரியையின் சாந்தகுமாரியைப்பற்றி சிலர் கேட்டதுபோல் "இன்னும் பல புத்தகங்களும் ஏன் வரவில்லை?" என்று பலர் கடிதம் எழுதுகிறார்கள். சென்ற மாதம், அடுத்த இதழில் தெரிவிப்பதாகச் சொல்லி இருந்தபடி எழுதுகிறோம்.

ஜனன மரண விகிதக் கணக்கில் எத்தனையோ குழந்தைகள் பிறந்தது தெரியாது இறந்துவிடுவதைக் காண்பதுபோல் சினிமாப் பட விஷயத்திலும் எத்தனையோ படங்கள் வந்த இடந் தெரியாது போய்விட்டதை நாம் காண்கிறோம். அம்மாதிரி முறையில் நமது நாவல்கள் படங்களாக வந்து மறைந்துவிடாமல் என்றும் சாகா வரம் பெற்று வாழும்படியானதாக இருக்கவேண்டுமென்பதே எமது கோரிக்கை. நடிக, நடிகைகளின் ஜாபிதாவை எண்ணிப் பார்த்தாலோ முதல்தரமானவர்கள் என்று சொல்லும் வகையில் ஒரு சிலர் தவிர மற்றவர்கள்?...எப்படியாவது எங்கள் புத்தகம் படமாக வந்தால் போதுமென்கிற மனப்பான்மை நமதாசிரியருக்குக் கிடையாது. ஒன்று வந்தாலும் உயிருள்ளதாகவும், மக்களால் என்றும் மறக்கமுடியாத உணர்ச்சியுடன் கூடியதாகவும் இருக்கவேண்டுமென்பது தான் நமது ஆசிரியரின் உன்னதமான விருப்பமாகும்.

இன்னிலைமையில் உயர்ந்த கம்பெனியும், உன்னத நடிகர்களும், ஒப்பற்ற ஸ்டுடியோவும், திறமை வாய்ந்த டைரக்டரும் ஒன்று சேருவது மிகவும் துர்லபமாக விருக்கிறது. எத்தனையோ முதலாளிகள் நம் புத்தகங்களைக் கேட்கிறார்கள். கதைகளில் படித்து மகிழ்ந்த ஸாரத்தை படத்தில் நடிப்பில் கொலை செய்ய இஷ்டமில்லாததே நம் புத்தகங்கள் தினம் ஒன்று வரமுடியாதிருக்கிறது.

நேஷனல் மூவிடோன் கம்பெனியார் உயர்ந்த நடிக கோஷ்டியினரை முதலில் ஒப்பந்தம் செய்த பிறகே நமது ராஜமோஹனையும் தியாகக்கோடியையும் அவர்களுக்குக் கொடுத்தோம். அதேபோல் ஜூபிடர் பிக்சர்ஸார் உயர்ந்த நடிகர் ஸ்ரீ. எம். கே. ராதாவையும் இன்னும் மற்றவர்களையும் தேர்ந்தெடுத்த பிறகு தான் நமது அனாதைப்பெண்ணைக் கொடுத்தோம். இவ்விரு கம்பெனியார் மூலமும் நமது நாவல்கள் சகல அம்சங்களிலும் உச்சத்தை எட்டும் முறையில் தயாரிக்கப்பட்டு வெளி வருமென்றும் என்றும் சாகா வரம் பெற்ற படங்களாக இருக்குமென்றும் மனப்பூர்வமாய் நாம் எதிர்பார்க்கிறோம். அந்த ஆவலை ராஜமோஹன் வெகு விரைவில் பூர்த்தி செய்துவிடும் என்று தெரிகிறது.

இம்மாதிரி உயர்ந்த ரத்தினங்கள் போன்ற நடிக கோஷ்டியைச் சேர்ந்த இதே கம்பெனியாரோ அல்லது இதர கம்பெனிகளோ வரும்போது நமது மோகினியின் அன்பர்களின் மனக் குறையைத் தீர்க்க சாந்தகுமாரி, சந்திரமண்டலம், மங்களபாரதி முதலிய புத்தகங்கள் வெகு விரைவில் வெள்ளித் திரையில் காணலாம். இவைகளைப்பற்றி இப்போது பேச்சுகள் நடந்து கொண்டிருக்கின்ற சந்தோஷச் செய்தியை மட்டும் தெரிவிக்கின்றோம்.

பருவத்தின்
மனோஹர
மலர்



# "பக்த மீரா"

ஒய். வி. ராவ் டைரெக்ட் செய்வது

ஒய். எச். ராவ் பி. ஏ.யின் உன்னத நடிப்பு

வஸுந்தரா தேவியின் கர்ணாம்ருத கானம்

---

**சிந்தாமணி பிக்சர்ஸ் லிமிடெட்,**

லியோ லாட்ஜ், 116, ராயப்பேட்டை ஹைரோடு,

போன் : 8331 சென்னை. தந்தி : காமதேனு

# இருந்தால் இப்படியல்லவோ இருக்கவேண்டும்!

இந்த அந்யோந்ய தம்பதிகள் விஜயம் செய்யும் இடத்திலெல்லாம் பெரிய திருநாளாகவே இருக்கிறது




கோயமுத்தூரில் முதல் வாரத்தில் மட்டும்

## மைனர் ராஜாமணி

என்னும் அரிய படத்தில் இவர்களை

## 25,000

பேர்கள் கண்டு மகிழ்ந்திருக்கின்றனர்

**27—11—37 முதல்**

கும்பகோணம் டைமண்ட் டாக்கீஸிற்கும்

திருச்சி வெலிங்டன் டாக்கீஸிற்கும்

விஜயம் செய்து வருகிறார்கள்

குழந்தைகள் முதல் கிழவர்கள் வரை கண்டு போற்றும்
— கன ஜோரான படம் இது —

**ஒலிம்பிக் பிக்சர்ஸார் தயாரிப்பு**

உன்னதமான ஸீன் ஜோடிப்பு ! உயரிய நடிப்பு !!

உங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட

**எம். கே. தியாகராஜ பாகவதர்**

நடித்த

# அம்பிகாபதி

**சென்னை கெபிட்டியில்**

**டிசம்பர் மீ 11-ம் தேதி முதல் ஆரம்பம்**

| கதை, வசனம் : | பாட்டுகள் : | டைரேக்ஷன் : |
|---|---|---|
| இளங்கோவன் | பாபநாசம் சிவன் | எல்லிஸ். ஆர். டங்கன் |

இதர நடிகர்கள் :

எம். ஆர். சந்தானலக்ஷ்மி
எஸ். எஸ். ராஜாமணி
டி. ஏ. மதுரம்
பி. ஆர். மங்களம்
சிறுகளத்தூர் சாமா

டி. எஸ். பாலையா
பி. பி. ரங்காச்சாரி
பி. ஜி. வெங்கடேசன்
என். எஸ். கிருஷ்ணன்
மாஸ்டர் நமச்வாயன்

விவரங்களுக்கு :—

**சேலம் சங்கர் பிலிம்ஸ் லிமிடெட்.,**

**சேலம்.**

# ஜகன்மோகினி

ஆசிரியை : வை. மு. கோதைநாயகி அம்மாள்

| | | |
|---|---|---|
| 15-வது ஆண்டு ஆரம்பம் | மாதாந்த நாவல் சஞ்சிகை | ஜனவரி 1938 |

ஆங்கில மாதம் முதல் தேதியன்று வெளி வரும்.

எல்லா பத்திரிகை விற்போரிடமும் கிடைக்கும்.

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா ரூ. 1—8 | ஜீவிய சந்தா ரூ. 25 | தனிப் பிரதி அணா 2 |

**ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனும்.**

இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப் படும் எல்லா நாவல்களும் இனமாக அளிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| பங்கு 1<br>நளினசேகரன்<br>வீரவஸந்தா<br>3 வைரங்கள்<br>ஆனந்தஸாகர்<br>பிச்சைக்காரக் குடும்பம் | இனமாக நாவல்கள் வேண்டுமா ? | பங்கு 2<br>பரிமளகேசவன்<br>உத்தமசீலன்<br>கதம்பமாலை<br>சுகந்தபுஷ்பம்<br>கோபாலரத்னம்<br>புத்தியே புதையல் |
| பங்கு 3<br>கௌரீமுகுந்தன்<br>ஸாரமதி<br>சோதனையின் கொடுமை | எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன்பணமனுப்புகிறீர்களோ, அத்தனவது நம்பர் பங்கிலுள்ள புத்தகங்களில் | பங்கு 4<br>தியாகக்கொடி<br>நவநீதகிருஷ்ணன்<br>சாமளநாதன்<br>மங்களபாரதி |
| பங்கு 5<br>வைதேகி<br>பத்மசுந்தரன்<br>ராதாமணி<br>காதலின் கனி<br>சாருலோசனு | ஒன்று இனம் | மூன்று புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புவோர்க்கு ஒரு வருஷ சஞ்சிகை இனம் |

**11-வதாண்டில் முதன் முதல் சந்தாதாரராய்ச் சேர்ந்து, இதுவரை தொடர்ச்சியாக ஆதரித்து, புது வருஷ சந்தாவை. டிசம்பர் 20 தேதிக்குள் அனுப்புகிறவர்களுக்கு**

## தனிப் பரிசு

1. 15-வதாண்டுச் சந்தாவை அனுப்புகையில் உங்களது சந்தா நம்பரைக் குறித்து, 1937-க்கு முன் வெளியான நமது நாவல்களில் முழு விலை ரூ. **2** (சந்தா நேயர்களுக்குக் குறைந்த விலை யல்ல.) பெறுமான நாவல்களின் பெயரை எழுதி இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள். ரூ. 2-க்கு மேற்பட்ட விலையுள்ள புத்தகங்கள் வேண்டுமாயின், அதிகமாகும் பணத்தை அனுப்ப வேண்டும்.

2. மேற்படி இனாம் நாவல்களுக்காக தபாற் செலவு அணா **4** சேர்த்தனுப்பவும்.

குறிப்பு :—டிசம்பர் 20-ந் தேதிக்குப் பிறகு அனுப்புகிறவர்களுக்கு இந்த தனிப் பரிசு கொடுக்கப்படாதாகையால் உடனே முந்துங்கள்.

## கவனித்துப் படிக்கவும்

10-வதாண்டு முதல் 14-வதாண்டு வரையில் சந்தாதாரரா யிருந்ததற்காக ஏற்கனவே இனாம் நாவல் பெற்றவர்கள், மறுபடியும் 15-வதாண்டுக்கும் பெறமுடியாதென்பதையும், அவர்கள் 19-வதாண்டு வரையில் தொடர்ச்சியாகச் சந்தா நேயர்களாயிருந்தால், அப்பொழுது இனாம் நாவல் பெறலாமென்பதையும் கவனிக்கவும்.

---

இரண்டாவது பதிப்பு வெளி வந்து விட்டது!

## ப்ரேமப்ரபா

அல்லது

## வாழ்க்கையின் நிழல்

மனித வாழ்க்கை நிழலின் பயங்கரமும், சமூகத்தின் கண்மூடித்தனமான கொடிய ஆட்சியின் விபரீதத்தினால் பச்சிளங் குழந்தைகளின் பரிதவிப்பும், உத்தமனையும் அதமனாகச் செய்யும் பணப் பேராசையும், இன்னும் இதுபோன்ற பல ருசிகரமான விஷயங்களும் நிறைந்த அருமையான நாவல்.

# 15-வது ஆண்டுப் பரிசுகளின் விவரம்

**முதல் பரிசு**

**ரூ. 20**

**2-வது பரிசு**

**ரூ. 15**

புது வருஷ சந்தாவை டிசம்பர் மாதம் 20-ந் தேதிக்குள் அனுப்பும் சந்தா நேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப்போட்டு 6பிரைஸ் சீட்டுகள் எடுத்து அவற்றிற்கு இதிற்கண்ட பரிசுகள் கொடுக்கப்படும்.

**3-வது பரிசு**

**ரூ. 10**

**3 பரிசுகள்**

**ரூ. 5 விகிதம்**

மூன்று சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்கும் நேயர்கட்கு அடுத்த ஆண்டின் சஞ்சிகையை இனாமாக அனுப்புவதுடன் அவர்களும் ஷை பரிசுப் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

o

தயவு செய்து புது வருஷ சந்தாவை முன் பணமாக அனுப்புங்கள்.
உங்களது சந்தா நம்பரை
மறக்காமல்
எழுதவும்.

---

**"ஜகன்மோகினி" ஆபீஸ்,**
26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

# சந்திரமண்டலம்

அல்லது

# அதிர்ஷ்டமழை

ஆசிரியை :

வை. மு. கோதைநாயகி அம்மாள்

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

26, தோடி வீதி,

திருவல்லிக்கேணி, சென்னை.

சகல உரிமைகளும் ஆசிரியையுடையவை

1937

விலை ரு. 1

1—96 பக்கங்கள், சென்னை, தம்பு செட்டி வீதி, 5-ம் நம்பரிலுள்ள டாடா ப்ரேஸிலும், மற்றவை திருவல்லிக்கேணி தோடி வீதி, 26-ம் நம்பரிலுள்ள "ஜகன்மோகினி" ப்ரெஸிலும் அச்சிடப்பட்டன.

# அட்டவணை

அதிகாரம் | பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | எட்டாக் கனியும் நட்டாற்றுக் கடிதமும் ... | 1 |
| 2. | புளியேப்ப விருந்தும், புனிதத் தொண்டும் ... | 14 |
| 3. | மாவிளக்கு மகிமை—மனமுருகாப் புதுமை ... | 24 |
| 4. | ப்ரேமை நதியில் த்யாகக் கப்பல் ... | 36 |
| 5. | கடவுளின் உதவியும், கடுமை மதியும் ... | 49 |
| 6. | முடிந்த கல்வியும் இடிந்த மனமும் ... | 59 |
| 7. | அகம்பாவச் செய்கைக்கு அவமானப் பரிசு ... | 69 |
| 8. | மணமா! பிணமா! மந்திரமா! மாயமா! ... | 86 |
| 9. | சொப்பன உலகமும், செப்பிடு வித்தையும் ... | 105 |
| 10. | கொள்ளிவாய்ப் பேயின் கொடிய தாண்டவம் ... | 114 |
| 11. | விதியின் வேகம்—வைராக்கிய தாகம் ... | 124 |
| 12. | காமவெறியனின் கண்மூடித் தாண்டவம் ... | 134 |
| 13. | விடியும் முன்னர் தொடர்ந்த இன்னல் ... | 145 |
| 14. | மைனரின் ஒய்யாரம், மனமோகன சிங்காரம் ... | 150 |
| 15. | வாள் பட்ட இடத்தில் தேளுங் கொட்டினால்? ... | 155 |
| 16. | அண்டப் புளுகும் ஆகாயப் பந்தலும் ... | 160 |
| 17. | உன்னாலே நான் கெட்டேன்; என்னாலே நீ கெட்டாய் | 166 |
| 18. | பூகம்பம்! பூகம்பம்! வறுமையே பூகம்பம் ... | 170 |
| 19. | மண்டல பூஜையும், அதிர்ஷ்ட மழையும் ... | 178 |
| 20. | உண்மை பக்தியும் உத்தமத் தொண்டும் ... | 184 |

ஸ்ரீமதி

# வை. மு. கோதைநாயகி அம்மாள்

## எழுதிய நாவல்கள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| **1925** | | | |
| 1. | வைதேகி | 2 | 8 |
| **1926** | | | |
| 2. | பத்மசுந்தரன் | 2 | 8 |
| **1927** | | | |
| 3. | சண்பக விஜயம் | 1 | 12 |
| 4. | ராதாமணி | 2 | 8 |
| **1928** | | | |
| 5. | கௌரீமுகுந்தன் | 1 | 12 |
| 6. | நவநீத கிருஷ்ணன் | 2 | 0 |
| **1929** | | | |
| 7. | கோபால ரத்னம் | 0 | 14 |
| 8. | மாதவமணி | 0 | 3 |
| 9. | சாருலோசனா | 2 | 8 |
| **1930** | | | |
| 10. | சுகந்த புஷ்பம் | 1 | 0 |
| 11. | வீரவஸந்தா | 0 | 8 |
| 12. | சாமளநாதன் | 2 | 0 |
| 13. | ருக்மிணிகாந்தன் | 2 | 0 |
| **1931** | | | |
| 14. | ஸாரமதி | 1 | 12 |
| 15. | நளின சேகரன் | 0 | 8 |
| **1932** | | | |
| 16. | பரிமள கேசவன் | 1 | 4 |
| 17. | மூன்று வைரங்கள் | 0 | 8 |
| 18. | உத்தமசீலன் | 1 | 4 |
| 19. | கதம்பமாலை | 1 | 0 |

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| **1933** | | | |
| 20. | காதலின் கனி | 2 | 8 |
| 21. | சோதனையின் கொடுமை | 1 | 8 |
| 22. | படாடோபத்தின் பரிபவம் | 0 | 8 |
| **1934** | | | |
| 23. | தியாகக் கொடி | 2 | 0 |
| 24. | ஜெயசஞ்சீவி | 0 | 4 |
| 25. | பக்ஷமாலிகா | 0 | 6 |
| 26. | புத்தியே புதையல் | 0 | 14 |
| **1935** | | | |
| 27. | மங்களபாரதி | 2 | 0 |
| 28. | பட்டமோ பட்டம் | 0 | 10 |
| 29. | சுகுண பூஷணம் | 0 | 4 |
| 30. | பிச்சைக்காரக் குடும்பம் | 0 | 8 |
| 31. | ஆனந்தஸாகர் | 0 | 8 |
| 32. | அம்ருததாரா | 0 | 4 |
| **1936** | | | |
| 33. | இன்பஜோதி | 1 | 4 |
| 34. | ராஜமோகன் | 1 | 4 |
| 35. | அனாதைப் பெண் | 1 | 4 |
| 36. | ப்ரேமப்ரபா | 0 | 8 |
| **1937** | | | |
| 37. | அன்பின் சிகரம் | 0 | 4 |
| 38. | சாந்தகுமாரி | 1 | 0 |
| 39. | மாயப்ரபஞ்சம் | 1 | 0 |
| 40. | சந்திர மண்டலம் | 1 | 0 |

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

திருவல்லிக்கேணி, சென்னை.

# 13-வது அதிகாரம்

## விடியும் முன்னர் தொடர்ந்த இன்னல்

"இன்று வெகு தூரம் அலைந்து திரிந்து வந்ததுபோல் முகத்தில் களைப்பு தெரிகிறதே. எங்கெங்கே சுற்றி னீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே அனுசூயா மகாதேவனுக்கு ஒரு கோப்பையில் குளிர்ந்த ஜலத்தைக் கொடுத்தாள்.

மகா:—(கண்ணீர் பெருகியவாறு) உம். அலைந்தாலென்ன? கால்களுக்குத் தான் கஷ்டமேயன்றி ஒன்றும் பயனே இல்லை. என்னால் இந்த துன்பத்தைத் தாங்கவே முடியவில்லை. உன் பெற்றோர்களைப்போல் நானும் கண் மறைவாக ஓடிவிடலாமா வென்றும், தற்கொலை செய்து கொள்ளலாமாவென்றும் தோன்று கிறது. அடுத்த நிமிடமே உன்னுடைய, குழந்தைகளுடைய, என் தாயாருடைய முகங்கள் என்னை ஒரு கலக்கு கலக்குகின்றன. என்னால் இனி அலையவும் சக்தி இல்லை. எத்தனை காலத்திற்குத் தான் இவ்விதம் சங்கடப்படுவது?

அனு:—(இடை மறுத்து) நாதா! என்ன வார்த்தை சொல்லத் துணிந்தீர்கள்? கடவுள் நம்மை சோதனை செய்தபோதிலும் காப்பதற்கும் தயங்கமாட்டான்; கைவிடமாட்டான். அந்த தைரியத்தை இழக்காத மன உறுதியல்லவா வேண்டும்? அதுவும் போய்விட்டதென்றால் என்ன ப்ரயோஜனம்? இன்று ஒரு பத்திரி கையில் "பெண் பாடசாலையில் சங்கீத உபாத்தியாயினி தேவை" என்று இருந்ததைப் பார்த்தேன். நமக்குள்ள புத்தியை, வித்தையைக் கொண்டு நாமேன் பிழைக்கக்கூடாது? தீய வழியி லிறங்காது நல்வழியில் எப்படி வேலை செய்தால் என்ன?" என்ற ஓர் பெரிய தைரியம் பிறந்து விட்டது.

உங்களைக் கேட்கவும் அவகாசமில்லை; உடனே அங்கு போனேன். தலைமை உபாத்தியாயினியைக் கண்டு பேசினேன். என்னை பாடச் சொல்லிப் பார்த்தார்கள்; அவர்களுக்குப் பிடித்து விட்டது. கடவுள் கிருபையால் மாதம் 20 ரூபாய்

சம்பளத்தில் எனக்கு அந்த வேலையைக் கொடுத்து விட்டார்கள். அதோடு அப்பள்ளிக்கூடத்தில் நம் குழந்தைகளும் இனமாகப் படிக்கலாமென்றும் கூறினர்கள். ஏதோ அந்த அம்பாளின் கிருபையில் இந்த ஒரு பெரிய கருணை பொழிந்தாளே அதுவே போதும. இனி நீங்கள் அதிகமாய் அலையவேண்டாம். மெதுவாகவே பாருங்கள். ஏதாவது கிடைத்தால் கிடைக்கட்டும்; இல்லையேல் பகவான் விட்ட வழி." என்றாள்.

மகாதேவன் அளவு கடந்த சந்தோஷத்துடன் "ஹா! அனுசூயா! இம்மாதிரி ஓர் சுபச் செய்தியை நான் காதில் கேட்பேனென்று நினைக்கவே இல்லை. எல்லாம் அவனருள்! ஆனால், அந்தப் பாவி மைனரால் இந்த வேலைக்கும் ஒரு பங்கம் ஏற்படாமலிருக்க வேண்டுமே என்று பயமாயிருக்கிறது. அப்பாதகனை நினைக்கும்போது தேகமே எரிகிறது. அந்த கண்ணாடி ஷாப்பின் கலவரத்திற்கு அந்த பாதகன்தான் காரணமென்று பிறகு தெரிந்ததல்லவா! அம்மாதிரி ஒன்றுமில்லாதிருக்க வேண்டுமே?" என்று வருந்தினன்.

மறு நாள் முதல் தன்னிரு குழந்தைகளையும் அனுசூயா கையில் பிடித்துக்கொண்டு பாடசாலைக்குச் சென்று, தன் கடமையை வழுவாது பெண்களுக்குப் பாட்டு சொல்லிக்கொடுத்து வந்தாள். தினம் மாலை 5 மணிக்கே மகாதேவன் பள்ளிக்கூடத்து வாசலில் வந்து காத்திருந்து மனைவியை அழைத்துக் கொண்டு செல்வான். மகாதேவனுக்கு சில மாதங்களுக்குப் பிறகு ஒரு காப்பி ஹோட்டலில் கணக்கெழுதும் வேலை கிடைத்தது. இருவருக்கும் வேலை கிடைத்திருப்பதனல் சாப்பாட்டுக்கு ச்ரமமின்றி குடும்பம் நடக்கவாரம்பித்தது.

மகாதேவனுக்கு ஓட்டல் வேலை கிடைத்த பிறகு அனுசூயா தனியே வரும்படியாக நேர்ந்தது. அனுசூயாவின் குடும்பத்திற்கு ஓர் நிம்மதி ஏற்பட்டதே யன்றி அவள் மனத்தில் எந்த நேரமும் கவலையே பெருகி நிம்மதியை வதைத்துக்கொண்டிருந்தது. தன் பெற்றோர்கள் மறைந்ததும், படுபாவி ஜமீந்தாரால் எந்த சமயம் என்ன தீங்கு நேருமோ என்ற பயமும் அவள் மனத்தை விட்டு அகலவே இல்லை. தான் இலையில் சாப்பிட உட்காரும்போதெல்லாம் தன் பெற்றோர்கள் என்ன செய்கிறார்களோ, சாப்பாட்டிற்கு எவ்வாறு தவிக்கிறார்களோ, என்ற உணர்ச்சி மிகுந்து சாப்பாடே பிடிக்காமல் தவிப்பாள்.

இரண்டொரு தினம் தனித்துச் செல்கையில் மைனர் வாருடன் வீதியிலேயே நின்று தன்னை கவனிப்பதைக் கண்டு

கொண்ட அனுசூயாவுக்கு பயம் முன்னிலும் அதிகமாகிவிட்டது. எந்த சமயம் என்ன நேருமோவென்ற பெருங்கவலையும் மன வேதனையும் சதா வாட்டிக்கொண்டே இருந்தது.

அனுசூயாவுக்கே கடுமையான ஜுரம் வந்துவிட்டதால் எதிர்பாராமல் ஒரு வாரம் பள்ளிக்கூடத்தில் லீவு வாங்கவேண்டியதாகிவிட்டது. லீவு கொடுக்கும்போது பள்ளிக்கூடத்து தலைமை உபாத்தியாயினி சாதாரண மனத்துடன் கொடுத்துவிட்டாள். பிறகு அங்குள்ள மற்றொரு உபாத்தியாயினி மைனரின் தூண்டுதலுக்கும், லஞ்சத்திற்கும் உள்பட்டு தலைமை உபாத்தியாயினியின் மனத்தைக் கலைத்து "அனுசூயா சரியாக பாட்டு சொல்லிக் கொடுப்பதில்லை. மாணவிகளுக்கு அது போதாதென்று வருத்த மிருக்கிறது. அனுசூயாவுக்கு சங்கித சாஸ்திரம் ஒன்றுமே தெரியாது. அவளால் மாணவிகளின் சங்கித ஞானம் வளர முடியாது.

சமீபத்தில் சங்கிதத்தில் டிப்ளமா பட்டம் பெற்ற ஓர் பண்டிதை இருக்கிறாள்; அவளை அமர்த்தலாம். அனுசூயா இப்போது கர்ப்பமாயிருப்பதால் அவள் சரியாக வரவும் முடியாது" என்றெல்லாம் உபதேசம் செய்து மனத்தைக் கலைத்துவிட்டதால் தலைவியும் அந்த தூபத்தில் ஈடுபட்டு, இனி மேல் வேலைக்கு வரவேண்டாமென்று அனுசூயாவுக்கு ஒரு கடிதத்தையனுப்பிவிட்டாள்.

அதைக் கண்டு கதி கலங்கிப் போய்விட்ட அனுசூயா, இதை எங்ஙனம் தன் கணவனிடம் சொல்வது என்று தவித்துக் கொண்டே படுத்திருக்கையில், இரவில் வழக்கமாக நேரங்கழித்து வரும் மகாதேவன் மாலை 6-மணிக்கே கண்ணீர் முட்ட வாடிய முகத்துடன் வந்ததைப் பார்த்ததும் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. தன் தள்ளாமையுடன் எழுந்து "என்? என்ன சமாச்சாரம்? என் கண்ணீர் பெருகுகிறது?" என்று மகா தேவனைத் தடவியபடியே கேட்டாள்.

வழக்கம்போல் குழந்தைகள் "அப்பா! பட்சணம் எங்கேப்பா? இன்னிக்கு என்னப்பா இத்தனை சீக்கிரமா வந்துட்டே? பொட்டலம் எங்கேப்பா! தாப்பா!" என்று கெஞ்சியவாறு ஜேபியில் கையைப் போட்டார்கள். இந்த செய்கை மகா தேவனின் துக்கத்தைப் பின்னும் தூண்டியது. கண்ணீர் பெருகியவாறு "அனுசூயா! நான் என்னவென்றுதான் பதில் சொல்லு வேன்? மகா கொடிய பாவியாகிய என்னை நீ காதலித்து

மனமுவந்து மணந்துகொண்டதற்கு உனக்கு மேலும் கஷ்டத்தைக் கொடுக்கிறேனே அதுதான் பலன்.

அனுசூயா! வேண்டுமென்ற சதியின் சூழ்ச்சியினால் ஓட்டலில் நேற்றும் இன்றும் 10 ரூபாய்க்கு கணக்கு தவறுதலாய் வந்தது. அம்மாதிரி தவறுதல் நான் வேண்டுமென்றே காட்டிவிட்டு பணத்தைத் திருடிக்கொண்டதாக என்மீது சந்தேகப் பட்டு என் சம்பளத்தையும் அதற்காகப் பிடித்துக்கொண்டு என்னைத் தள்ளி விட்டார்கள். ஒரு அல்ப விஷயத்தில் எவ்வித பாபமும் அறியாத நான் பல பேர் முன்னிலையில் பழியையும், அவமானத்தையும் அடைந்து வீட்டிற்கு வந்தேன். இம்மாதிரி எத்தனை காலத்திற்குத் தான் அனுபவிக்கவேண்டுமோ தெரியவில்லையே!" என்று கூறும் போது, அன்று அனுசூயாவுக்குப் பள்ளிக்கூடத்திலிருந்து வந்த கடிதம் பாயின்மீதே இருப்பது இவன் திருஷ்டியில் பட்டதும் அதைக் கையில் எடுத்துக்கொண்டான்.

அதைப் பார்த்துவிட்ட அனுசூயா, இந்த வருத்தமான சமயத்தில் இதுவும் தெரிந்து விட்டால் இன்னும் கஷ்டமாகி விடுமே என்ற பயத்தால் அதை அவனிடமிருந்து பிடுங்கப் போனாள். மகாதேவன் "என் தடுக்கிறாய்? இதுவும் நம் தலைக்கு ஆபத்தான கடிதமாகத்தானிருக்கும். தலை மிஞ்சிய தண்ணீர் ஜாண் உயரமானால் என்ன? முழ உயரமானால் என்ன? கவலைப் படாதே" என்று கூறிக்கொண்டே படித்துவிட்டான். அவளால் ஒன்றுமே பேச முடியவில்லை.

தலை கிறு கிறுவென்று சுழல்வது போலாய்விட்டது. இத்தனைக்கும் காரணம் அப் பாவிதான் இருக்கவேண்டும். அவனாலன்றி வேறு விதத்தில் தீங்கு நேரிடுவதற்கு வழியே இல்லை என்ற உணர்ச்சி இருவருடைய மனத்திலும் போராடியது. அனுசூயா தன் புருஷனைத் தேற்றி "அத்தான்! இதென்ன இது? எல்லாம் தெரிந்த நீங்களே இம்மாதிரி துயரப்பட்டால் குழந்தைகளுக்கு விவகாரம் தெரியாததனால் மனங் கலங்கி திகில் பிடித்து விடாதா? பகவானிடத்தில் அதிக பக்தியுடையவர்களைத் தான் அவர் சோதனைகள் பலவற்றிற்கு உள்ளாக்கி இன்னும் பக்தியுண்டாகச் செய்வார். குசேலர் குடும்பத்தை விட நம் குடும்பம் மோசமா! அந்த பகவானின் அருளால் கலியுகக் குசேலன் என்ற கதிக்கு 37 குழந்தைகளைக் கொடுத்து பரீக்ஷிக்காமல் இம்மட்டுடன் வைத்திருக்கிறாரே அதுவே பெரிதல்லவா! வீணாகக் கவலைப்படும் நேரத்தில் பகவானை பஜித்தால் பலன் உண்டு. தன் மூத்த குழந்தைகளை நோக்கி "கண்மணிகளே!

உங்களுக்கு அன்று சொல்லிக் கொடுத்த பாட்டைப் பாடுங்கள். அப்பாவுக்கு தலைவலியாம். பாட்டு கேட்டால் சரியாகிவிடுமாம்." என்றாள்.

உடனே குழந்தைகள் அளப்பரிய சந்தோஷத்துடன் எழுந்து நின்றுகொண்டு அந்த பாடலுக்குத் தக்க அபிநயத்துடன் நடித்துக்கொண்டே வெகு அழகாகப் பாடினார்கள். அதைக் கேட்கும் ப்ரம்மானந்தத்தில் இவர்களின் விசனம் மறைந்து பதுமைபோலானார்கள்.

சில நாட்கள் ஓடி மறைந்தன. சாப்பாட்டுக்கும் இல்லாத தரித்திரத்தை விட உலகத்தில் வேறு என்ன கஷ்டம் இருக்கிறது? நான்கு குழந்தைகளும், ஒரு கிழவியும், தம்பதிகள் இருவரும் ஆக ஏழு ஆத்மாக்களை அரை வயிறு கஞ்சியாவது வார்த்து திருப்தி செய்ய தினம் குறைந்தது அரை படி அரிசியும் அதற்குத் தக்கின மேல் சாமான்களும் இல்லாமல் எப்படி காலத்தைக் கடத்துவது? தாங்கள் இருவரும் வேண்டுமானால் பட்டினி கிடந்து விடலாம்; குழந்தைகளும், கிழவியும் என்ன கதியாவது? சகிக்க முடியவில்லை.

இச்சமயத்தில் அனுசூயாவின் உடன்பிறந்த அருணாசலத்தின் ஞாபகம் அதிகமாக அவள் மனத்தில் பாதித்தது. அவனிடம் ஒத்தாசை கேட்டால் கண்டிப்பாகக் கிடைக்காது என்பது தெரியும். இருப்பினும் ஒரு ஆசை அதையும் பார்த்து விடுவதென்று எப்படியோ கஷ்டப்பட்டு ஒரு கவர் சம்பாதித்து கடிதம் எழுதிப் போட்டாள்.

அதற்கு 10 தினங்களுக்குப் பிறகு அருணாசலத்தினிடமிருந்து ஒரு அபூர்வமான பதில் கிடைத்தது.

"அனுசூயா! உன் கடிதங்கண்டு நான் ஆச்சரியமடைந்தேன். உனக்கு ஆதி முதல் பணக்கார தடபுடல் பிடிக்காமல், ஏழை ஏழை என்று சதா கத்திக் கொண்டு அம்மாளையும், என்னையும் திட்டிக்கொண்டு வந்தாயே அந்த ஏழை நிலைமையில் நீ பரிபூரண சந்தோஷத்தையடைந்திருப்பாய் என்றல்லவா எண்ணினேன். நீ ஆசைப்பட்டு விரும்பியது உனக்கே கிடைத்தது. இதற்காக ஏன் கஷ்டப்படுகிறாய்? நீ நம்பி இருப்பது போலவே உன்னைக் கடவுள் காப்பாத்துவார் என்று நானும் நம்புகிறேன்.

அருணாசலம்."

இக் கடிதம் அனுசூயாவின் ஏற்கெனவே இருந்த பக்தி வைராக்யத்தை அதிகரிக்கச் செய்தது. குழந்தைகளின் பரிதாபத்தையும், தன்னருமைத் தாயாரின் கண்ராவியையும் கண்டு சகிக்காமல் மகாதேவனின் உயிர் நாளுக்கு நாள் நீங்கிக்கொண்டே வருவது போலாயிற்று. இனி எந்த கீழ்த்தரமான கூலி வேலை செய்வதற்கும் அஞ்சாமல் துணிந்து, செய்து குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டுமென்ற பெரிய வீராவேசம் உதித்து விட்டதால் தன் தாயிடமும் தெரிவிக்காமல் ரயில்வே ஸ்டேஷனில் மூட்டை சுமக்கச் சென்றான். அங்கும் போட்டி யதிகமாகையால் மார்கெட்டில் காய் கறி வாங்கும் பெரிய மூட்டைகளைத் தூக்கிக் கூலி சம்பாதிக்க முற்பட்டு அதில் கிடைக்கும் நாலணு 5 அணுவில் கஞ்சி குடிக்க வாரம்பித்தாலும், வீட்டு வாடகையின் தொல்லைக்கு என்ன செய்வது? தத்தளித்து வாடுவதை விட வேறு என்ன செய்ய முடியும்?

---

## 14-வது அதிகாரம்

### மைனரின் ஒய்யாரம், மனமோகன சிங்காரம்

ஒரு தினம் அனுசூயா குழந்தையின் சீக்கின்பொருட்டு அதை எடுத்துக்கொண்டு தர்ம ஆஸ்பத்திரிக்குப் போய்க்கொண்டிருக்கையில் எதிரில் அதிவேகமாக காரில் வந்துகொண்டிருந்த மைனர் ஜமீந்தார் அனுசூயா செல்வதைக் கண்டு காரை நிறுத்திவிட்டு வழி மறித்து, காரிலிருந்தபடியே "அனுசூயா! நில்லு; நில்லு" என்றான்.

இந்த செய்கை அனுசூயாவின் உயிரையே பிய்த்து எடுப்பது போலிருந்தது. அவள் நிற்காமல் மீண்டும் இரண்டடி எடுத்து வைத்தாள். ஜமீந்தார் மீண்டும் "அனுசூயா! ஓடாதே; நில்லு. உனக்கு நல்லதைக் கூறத்தான் அழைக்கிறேன். இந்த வெய்யிலில் ஏன் நடந்து போகிறாய்? இதோ காரில் உட்காரு. நீ எங்கே போகவேண்டுமோ அங்கே கொண்டுவிடுகிறேன்" என்றான்.

அனுசூயாவின் மனத்தில் ஆத்திரம் எல்லை கடந்து பொங்குகிறது. எத்தனையோ எண்ணங்கள் சுழன்று சுழன்று மறை

கின்றன. பளிச் பளிச்சென்று சில புதிய யோசனைகளும் எண்ணங்களும் உதயமாயின. தன் ஆத்திரத்தைச் சற்று அடக்கிக்கொண்டு நின்றாள். அவன் முகத்தைப் பார்த்ததும், பார்க்காததுமாக பேசத்தொடங்கி "இந்த ஏழையின்மீது இத்தனை கருணை பிறந்திருப்பதே போதும். நான் ஆஸ்பத்திரிக்குச் செல்கிறேன். அங்கு நேரமாகிவிட்டால் கதவு பூட்டி விடுவார்கள்." என்றாள்.

மைனர்.—(அளப்பரிய சந்தோஷத்துடன்) என்ன அனுசூயா! கருணை இப்போது தான் பிறந்திருப்பது போல் பேசுகிறாய். இரவு பகல் உன்னைத் தவிர வேறு எண்ணம் உண்டா! நீ தான் அதை யறியாமல் என்னைப் பகைத்துக்கொண்டு திண்டாடுகிறாய். உன் புருஷன் ரயில்வே ஸ்டேஷனில் மூட்டை தூக்கும் கன்ராவியைப் பார்த்தால் உனக்கும் இப்படிப்பட்ட தலையெழுத்து வரவேண்டுமா என்று உள்ளங் கொதிக்கிறது.

183013

இந்த வார்த்தையைக் கேட்டதும் அனுசூயாவின் உள்ளம் உருகியது. தன் புருஷன் மூட்டை தூக்கிப் பிழைக்கும் ரகஸ்யம் அவளறியமாட்டாளாகையால், அந்தக் கோலத்தில் மகாதேவன் மூட்டை தூக்குவது போன்று கண் முன்பு தெரிந்து பின்னும் வருத்தியது; பேசாமடந்தையாய் நின்றாள்.

மைனர்:—ஐயோ பாவம்! அது மட்டுமா? மார்கெட்டில் கூலிகளுடன்கூட அவன் கூடை தூக்குகிறான். ஒரு தினம் வேலை கிடைக்காவிட்டால் சுண்ணும்பு இடித்து சித்தாள் வேலையும் செய்கிறான். இவைகளைப் பார்க்கும்போது என்னுயிரே துடிக்கிறது. இப்போதும் முழுகிப்போகவில்லை. அனுசூயா!....

அனு :—(இடை மறுத்து) ஐயா! உங்கள் அன்பிற்கு நான் மிகவும் நன்றியுடன் வந்தனஞ்செய்கிறேன். எனக்கு நேரமாகிறது. உங்களிடம் சாவகாசமாகப் பேசினால் தான் விஷயங்களை விளக்க முடியும். ஆகையால், நீங்கள் நாளை விடியற்காலை நான்கு மணிக்கு எங்கள் குடிசைக்கு வாருங்கள். அப்போதுதான் என் மாமியார் நதிக்கு ஸ்நானத்திற்குப் போயிருப்பாள். குழந்தைகளும் தூங்கும். என் புருஷனையும் அதற்குள் சரிப்படுத்தி வைத்துவிடுகிறேன். சவுகரியமாகப் பேசிக்கொள்ளலாம். என்ன? கட்டாயம் வாருங்கள். நான் வருகிறேன்.—என்று கூறிக்கொண்டே விற்றென்று நடந்துபோய்விட்டாள்.

மைனரின் சந்தோஷத்திற்கு எல்லைதான் உண்டா? பொங்கிப் பூரித்தபடியே "அனுசூயா! இந்தா, இந்தா! சற்று

நில்லு. இதை உன் செலவுக்கு வைத்துக்கொள்ளு" என்று கூவிக் கொண்டே தன் இழுத்த காலுடன் நடந்து வந்து அனுசூயா விடம் 100 ரூபாய் நோட்டைக் கொடுத்தார். அனுசூயா பதில் பேசாமல் அதை வாங்கிக்கொண்டு ஜமீந்தாருக்கு அதிக நம்பிக் கையை உண்டாக்கி விட்டுச் சென்றுவிட்டாள்.

அன்று இரவு அனுசூயா தன் கணவன் வந்தவுடன் அவனிடம் நடந்த சகலத்தையும் கூறி, சில ரகஸியமான விஷயங் களையும் தெரிவித்தாள். இருவரும் பலமாய் யோசனை செய்த பின்பு ஒரு முடிவுக்கு வந்தார்கள். மகாதேவன் வெளியில் சென்று திரும்பி வந்தான். அன்று இரவு இருவருக்கும் தூக்கமே இல்லை. மைனரின் வரவையே அதிக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கடியாரத்தில் மணி கிரமமாக சுற்றிக்கொண்டே நாலுக்கு வந்து நின்றதும் டாங் டாங்கென்று மணியடித்தது. பின்மாலையில் பாடும் பறவைகள் ஆநந்தமாகப் பாட வாரம்பித்தன. சிலுசிலுப் பான பனிக்காற்று வீசி குளிரையுண்டாக்கியது. அதே சமயம் வீதியில் கார் வந்து நின்றது. மைனர் கம்பிளிச்சட்டையும், தலையில் ப்ளானல் மப்ளரும், வாயில் ஸிகரெட்டுமாக, கமகமவென்று வாசனை வீச ஒய்யார நடையுடன் வந்தார். தம்பதிகளிருவரும் அவரை வரவேற்று "வாருங்கள், வாருங்கள். இன்றே ஒரு சுதினம்" என்று கூறி, ஆசனத்தைக் காட்டி அமரச்செய்தார்கள்.

அந்த அன்பான உபசார வார்த்தைகளில் மதிமயங்கிப் போன மைனர் ஜமீந்தார் தாங்கமாட்டாத சந்தோஷத்துடன் "நீங்களும் உட்காருங்கள். மிஸ்டர் மகாதேவன்! மிஸஸ் மகா தேவன்! ஏதோ ஆதி சமாசாரங்களை எல்லாம் அடியோடு மறந்துவிடுங்கள். நாம் மூவரும் இனி புனர் ஜென்மம் எடுத்த வர்களைப்போலவே இருப்போம். உங்கள் விவாகத்தன்று இரவு உங்கள் படுக்கை யறைக்கு வந்ததே முட்டாள்தனம் என்று பின்னர் உணர்ந்து வருந்தினேன்; அப்போது அது தெரிய வில்லை. அந்த கொலைப்பாதகப் பிடையின் மரணத்தைப்பற்றி நீங்கள் என் மேலுள்ள ஆத்திரத்தில் போலீஸாரிடம் ஏதாவது சொல்லிவிடப் போகிறீர்களே என்ற பயத்தினால் உங்களை மிரட்டி அப்படிச் சொல்வதில்லை என்று கையெழுத்து வாங்கவே வந்தேன்.

அதுதான் எத்தனையோ அதிசயமாகக் கடங்கலாய் விட்டது. பிறகு சரியான ஆள்களைப் பிடித்து அதையப்படியே

அமுக்கிவிட்டேன்....சரி....அந்த சாக்கடைப் பேச்சுகள் இப்போது எதற்கு? அனுசூயா! எனது க்ராமத்துக்குப் பூராவும் ஏஜெண்டாக மகாதேவனை ஏற்படுத்தி விடுகிறேன். அதில் ஏராளமான வருமானம் வரும். அது வெறுமை பார்ப்பவர்களுக்காக ஒப்புக்குத்தானே. எனது திரண்ட செல்வம் முற்றும் உன்னுடையது என்பதைக் கூறவேண்டுமா?....ஹி! ஹி! ஹி! நானே உன் அடிமையாகிவிட்ட பிறகு வேறு என்ன சொல்லவேணும்?'' என்று அனுசூயாவை ஒரு மாதிரி விகாரப் பார்வை பார்த்து, பல்லைப் பிளந்தான்.

அனுசூயாவும் பெரியதாக நகைத்துக் கொண்டே "ஆமாம் ஜுக்கா! இதைப்பற்றி உங்களிடம் நேரில் பேசவேண்டு மென்று வெகு நாட்களாக யோசனைதான். இருந்தாலும் எப்படி கேட்பது என்ற சங்கோஜத்துடன் இத்தனை நாள் பேசாமலிருந்து விட்டேன். இன்று அதற்கு நல்ல காலம் பிறந்தது. இதோ சூடாகக் கொஞ்சம் காபி சாப்பிடுங்கள். இந்த ஏழை குடிசையில் நீங்கள் வந்து காப்பியாவது குடித்துச் சென்றால்தான் எங்களுக்கு மன த்ருப்தியாகவிருக்கும்.'' என்று கூறிக்கொண்டே அனுசூயா காப்பியைக் கொடுத்தாள்.

மைனர் பல்லைப் பிளந்துகொண்டே "அனுசூயா! அதென்ன அப்படிக் கூறுகிறாயே! உன் கையால் விஷத்தைக் கொடுத்தாலும் அது எனக்கு அமிருதமாக மாறிவிடாதா?''என்று கூறிக்கொண்டே காப்பியைக் குடித்து விட்டு, "நீங்கள் சாப்பிடவில்லையா?'' என்றார். அனுசூயாவும், மகாதேவனும் "இதோ சாப்பிடுகிறோம்'' என்று தயாராக வைத்திருந்த காப்பியைக் குடித்தார்கள்.

மைனர் :—அனுசூயா! இப்போது உங்களிருவருக்கும் வேலையே இல்லையே! எப்படி காலக்ஷேபம் நடக்கிறது? மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டல்லவோ இருப்பீர்கள்!

அனு :—ஆமாம். என்ன செய்வது? சுகப்படும் காலம் வரும் வரையில் கஷ்டப்பட்டுத்தானே ஆக வேண்டும்? அனேக நாட்கள் நாங்கள் பட்டினிதான்.

மைனர் :—ஐயோ! பரிதாபம்!....இதென்ன சனி! தூக்கம் வருகிறது....நான் எப்போதும் காலை 8-9 மணிக்கு முன்பு எழுந்திருக்கும் வழக்கம் கிடையாது; இன்று இரவு முற்றும் இங்கு வரப்போகும் சந்தோஷத்தில் தூக்கமே வரவில்லை. இப்போது கண்ணைச் சுழற்றுகிறது.

அனு:—அதற்கென்ன ப்ரமாதம்? இதை உங்கள் சொந்த இடமாக எண்ணி நிம்மதியாக 8 மணி வரையில் தூங்கலாமே.... சங்கோஜமே வேண்டாம்.

மைனர்:—உன் மாமியார் ஸ்நானம் செய்துவிட்டு வந்து விட்டால்?........

அனு:—அதற்கென்ன பரவாயில்லை....சும்மா தூங்குங்கோ....

மைனர் நன்ருகக் கண்ணை மூடி விட்டார். மகாதேவன் "சார்! சார்!" என்று கூப்பிட்டுப் பார்த்தான்; பதிலில்லை. உடனே வீதிப் பக்கம் தலையை நீட்டினுன். மைனரின் மோட்டார் ட்ரைவர் "வரலாமா?" என்று கேட்டுக்கொண்டே வந்தான். "ஓகோ! நல்ல தூக்கந்தான். சரி; சரி....இம்மாதிரி கொலைபாதகர்களை சும்மாவே விடக்கூடாது. சரியானபடி புத்தி புகட்டிப் பாடம் கற்பித்துத்தான் அனுப்பவேண்டும். உங்கள் யோசனையே யோசனை. நான் மனம் ஒப்பாமலேயே பாழும் வயிற்றிற்காக இந்த மகானுபாவனிடம் வேலையாக இருக்கிறேன். இவன் பண்ணுகிற அக்ரமத்திற்கெல்லாம் உடந்தையாக இருக்கும் பாபத்தினுல்தான் என் குழந்தைகள் ஒன்றுகூடத் தக்காமல் எமலோகம் போகிறதென்று என் சம்சாரம் திட்டுகிருள். இந்த காலத்தில் இந்த வேலையை விட்டால் பிழைப்பு ஏது? அதற்காகத் தான் சகித்து வருகிறேன். ஊம்; நடக்கட்டும்" என்று கூறிக் கொண்டே தன் ஜோபிலிருந்த க்ஷவரக் கத்தியை எடுத்தான்.

மகாதேவன் பிடித்துக்கொண்டான். ட்ரைவர் மைனரின் அழகிய கிராப்பு தலையில் அற்புதமாக ப்ரகாசிக்கும்படி 5 இடங்களில் சிறிய குடுமிபோல் க்ஷவரம் செய்ததோடு பாதி மீசையை வெட்டியும், ஒரு புருவத்தை எடுத்தும் முகத்தில் செம்புள்ளி, கரும் புள்ளி குத்தியும் அபாரமான அலங்காரத்தைச் செய்துவிட்டார்கள். முதல் நாள் மைனர் அனுசூயாவிடம் கொடுத்த 100 ரூபாயை ட்ரைவர் கையில் கொடுத்து "இதை நீதான் சாப்பிட்டுப் பிழைத்துக்கொள். கர்மியின் பணம் தர்மத்தில்தான் செலவாகட்டும்" என்ருள்.

அடுத்த நிமிடமே ஜமீந்தார் வரும்போது கட்டி இருந்தபடியே மப்ளரைக் கட்டிவிட்டார்கள். பின்னும் அரை மணிக்கெல்லாம் ஜமீந்தார் சற்று தெளிவு பெற்று கண்ணைத் திறந்தார். "சரி: அனுசூயா! நான் இப்போது வீட்டுக்குப் போகிறேன். உனக்கு செக்கு மாற்றி இன்னொரு 100 ரூபாய் அனுப்புகிறேன். எங்காவது கடன் இருந்தால் கொடுத்துவிட்டு இந்த வீட்டைக் காலி பண்ண ஏற்பாடு செய். நான் போய் இன்று இரவு

8-மணிக்கு மேல் வருகிறேன். அப்போது நீ ரெடியாக இரு. என்னுடன் காரில் வா; சற்று உலாவி விட்டு வரலாம்" என்ருர்.

அனுசூயாவுக்கும் மகாதேவனுக்கும் அவர் முகத்தைப் பார்க்க முடியாத சிரிப்பு வயிற்றைப் பிய்த்துக்கொண்டு வருகிறது. அதை யடக்கிக்கொண்டு "ஓ! அதற்கென்ன? தயாராகக் காத்திருக்கிறேன்" என்ருள். மைனரும் ஒய்யார நடையுடன் இருட்டில் தடவி நடந்தபடியே காரில் போய் ஏறிக்கொண்டார். உடனே கார் பறந்தது. உள்ளே அதுவரையில் மறைந்துகொண்டிருந்த சங்கரியும் வெளியில் வந்தாள். மூவருமாக உருண்டு, உருண்டு நகைத்து, வயிறும் வலித்துப் போய்விட்டது. "படுபாவி மகன் காமக் கள்வன், மதியில்லா மண்டூகம், எத்தனை வர்ணனைகளுக்கும் பொருத்தமான பீடை ப்ரபு அவன் தான்! இதோடாவது அவனுக்கு புத்தி வராதா பார்ப்போம்" என்ருள் அனுசூயா.

---

## 15-வது அதிகாரம்

### வாள்பட்ட இடத்தில் தேளுங் கொட்டினல்?

நேரே தன் வீட்டிற்குச் சென்ற மைனர் பொழுது விடியும் முன்பு எழுந்து என்ன செய்வது என்றும், தான் கோரிய காரியம் நிறைவேறிவிட்டது என்ற சந்தோஷத்தினுலும் மப்ளரைக் கழட்டி எறிந்துவிட்டு அப்பாடா வென்று படுத்து நன்ருக ஆநந்த யோசனையுடன் தூங்கிவிட்டார். காலை 8-மணி சுமாருக்கு கட்டிலிலிருந்து வழக்கம்போல் இறங்கி பெரிய நிலைக்கண்ணுடி மேஜைக்கு எதிரில் நாற்காலியில் உட்கார்ந்த படியே கண்ணுடியைக் கவனித்தார்.

தூக்கக் கலவரத்தில் தன் பிம்பத்தைக் கண்ணுடியில் பார்த்ததும் விபரீதமான பயங்கரத்துடன் யாரோ தன்னறையில் நிற்பது இந்த கண்ணுடியில் தெரிவதாக எண்ணிப் பயந்து நடுங்கிய படியே "யாரடா அது என்னறையில் தைரியத்துடன் வந்திருப்பது?" என்று கூறிக்கொண்டே நாற்காலியிலிருந்து எழுந்து நாற்புறமும் திரும்பிப் பார்த்தார். ஒருவரையுங் காணுமையால் சிறிது ஏமாற்றங்கொண்டு இரண்டடி நகர்ந்தார். அங்கு போடப் பட்டிருந்த நிலைக்கண்ணுடி பீரோவின் முன்பு வந்ததும் பழைய படியே மீண்டும் தன் உருவம் தெரிந்தது கண்டு அலறியவாறு

மிரண்டு போய் ஒரு மாதிரியாக விழித்துக்கொண்டே "யாரடா! தடிப் பயலே!" என்று அறை முற்றிலும் சுற்றிச் சுற்றிப் பார்த்தார்.

"யாரடா அது? என்னறையில் தைரியத்துடன் வந்திருப்பது?"




தாளிட்ட கதவு தாளிட்டபடியே இருக்கிறது. அந்த அறையிலிருக்கும் கண்ணாடிகளிலெல்லாம் தன்னுருவத்தைக் கண்டு மிரண்டு ஒரு விதமான கிலியும், மார்பில் படபடப்பும் உண்டாகி, தைரியத்துடன் கண்ணாடியின் முன்பு நின்று சாவகாசமாய் பார்த்த பின்னரே தன்னுடைய உருவந்தான் இந்த நிலைமையை

அடைந்திருக்கிறதென்பதை உணர்ந்துகொண்டு மேஜைமீது தலையைப் பட்டீரென்று அறைந்துகொண்டு கவிழ்ந்தார்.

அச்சமயம் அவருக்கு இருந்த ஆத்திரமும், அவமானமும் ரௌத்திராகாரமான கோபமும் அளவிட்டுக் கூறவே சாத்ய மன்று. தன் முகத்தைப் பார்க்கிருர். பல்லைக் கடிக்கிருர். "ஆகா! இந்த கோலத்தை நமக்கு யார் செய்திருப்பார்கள்? ஆஹ்ஹா! இப்போதல்லவோ விஷயம் புலப்படுகிறது. அந்த நயவஞ்சகக் கள்ளிதான் நம்மை இம்மாதிரி அவமானப்படுத்த வேண்டுமென்ற காரத்தை வைத்துக்கொண்டு வெகு எளிதில் நம்மை மயக்கி ஏய்த்துவிட்டாள்.

'ஆகா! அடீ சண்டாளி! கொலைப்பாதகி....ஐயயோ! என்ன விகாரம்! என்ன அக்ரமம்! (முகத்தைக் கழுவிக் கொண்டு) ஐயோ! ஒரு புருவத்தையே காணவில்லையே !....பாதி மீசை !.... ஐயையோ ஐந்து குடுமியா ?....ஹா!....மதிமோசம் போனேனே!....

இந்த நிலைமையில் நம்மை யாராவது பார்த்துவிட்டால் நாம் என்ன செய்வது?" என்று ஆத்திரமும், ஆவேசமும் கொண்டு மனம் தத்தளித்துத் தாண்டவம் புரியும் சமயம் வெளியில் ஏக இரைச்சல் கேட்பதை யறிந்து கதவின் இடுக்கால் நோக்கினுர். அவ்வளவுதான் அவருக்கு சப்த நாடியும் அடங்கிவிட்டது. மில் தொழிலாளிகளின் பெருங் கூட்டத்தைக் கண்டு கதிகலங்கி நடு நடுங்கிப் போய்விட்டார்.

வெளியில் பங்களாவின் முன் வாசற்படியில் கும்பலாகத் தொழிலாளர்கள் நின்றுகொண்டு "எஜமான்! எஜமான்! வெளியே வாங்க. எப்ப பாத்தாலும் கண்ணுலெயே ஆம்பட்ரது இல்லெ.... அப்போன்ஞ அப்போ எங்களெல்லாம் தூண்டி கலவரம் பண்ணி அந்த எஜமான்கிட்டே விரோதம் பண்ணிக்கச் சொன்னீங்க. எங்களே ஆனெயாக்கரேன், பூனெயாக்கரேன்னு சொன்னீங்க. ஓங்க வார்த்தெயெ நம்பி அந்த எஜமானுக்கு மோசம் பண்ணேம்.

இதுவரெக்கும் எங்களுக்கு நீங்க சொன்ன வார்த்தெயெ நடத்தல்லெ....சம்பளம் ஓசத்தாக்காட்டி போறது. சம்பளத்தை யாச்சும் தவருமெ குடுக்காதெ எயெ வயித்திலே அடிக்கிறீங்க. இனிமே நாங்க கொஞ்சங்கூட பொறுக்கமாட்டோம்....சம்பளத்து பாக்கியெ வக்கிறீங்களா? நாங்க வேலெ நிறுத்தம் பண்றதோடெ மில்லுக்குள்ளற இருக்கர சாமானெ எடுத்துக்கிட்டுப் பூடட்டுமா? கதவு தெறங்க. தெறக்கரங்களா கதவெ ஒடச்சிகிட்டு உள்ளே

வரட்டுங்களா?" என்ற சத்தம் மைனர் காதில் விழுந்த உடனே அவருடைய உயிரே போக வாரம்பித்ததெனலாம்.

ஏற்கெனவே தவிக்கும் அவமானத்துடன் இந்த ஆபத்தும் சேர்ந்ததும், அவருக்கு ஆகாயமும் பூமியும் ஒன்ருக கிறு கிறு என்று சுற்றவாரம்பித்தது. தன்னுடைய இந்த கேவலமான நிலைமையில் யாரும் தன்னைப் பார்க்காது முதலில் காப்பாற்றிக் கொண்டால், பிறகு எப்படியாவது தப்பித்துக் கொள்ளலாம். என்ன விதமாக இப்போது தன்னைக் காப்பாற்றுவது என்ற துடிப்பும் குழப்பமும் உண்டாகி விட்டதால், ஒரு வெள்ளை வேஷ்டியை எடுத்து வட நாட்டு ஸ்திரீகளைப்போல் உடுத்தி, முட்டாக்கு இட்டு, முகத்தை மூடிக்கொண்டு அவ்வறையின் மற்ருெரு கதவின் வழியாகப் பின் கட்டுக்குச் செல்லும் பாதையுடன் திரும்பிப் பார்க்காமல் ஓட்ட ஓட்டமாக ஓடவாரம்பித்தார்.

போதாத காலத்திற்குப் புறக்கடையில் நின்றிருந்த ட்ரைவர் இந்த கோலத்தைக் கண்டதும், இது ஜெமீன்தார்தான் என்றதை நன்ருகத் தெரிந்து கொண்டதும், சிரிப்பை யடக்க முடியாமல் அடக்கிக் கொண்டு எதிரே ஓடி வந்து "யாரம்மா அது?....இப்படி எங்கிருந்து போகிறீர்கள்?" என்ருன்.

மைனரின் ப்ராணன் பறக்கிறது. பதிலே பேசாமல் விடுவிடு என்று குறுக்கில் விழுந்தடித்துக்கொண்டு ஓடுகிருர். ட்ரைவரும் பின்னுல் ஓடுகையில், ஒரு கல் தடுக்கி கீழே விழுந்து விட்டான். அதே சமயம் மைனர் வெகு வேகமாக ஓடி ஓர் புதருக்குள் மறைந்து விட்டார்.

வீதியில் காத்திருந்த கூலிகளுக்குத் தகவலே கிடைக்காததால், ஏக கூச்சலும் கலவரமும் உண்டாகியது. கங்காராம் அங்கு வந்து கூலிகளின் கோஷத்தை நிறுத்தி அவர்களைச் சமாதானம் செய்து "நான் மைனரிடம் சொல்லி எல்லாவற்றையும் இன்னும் 2 நாட்களுக்குள் உங்களுக்குத் திருப்திகரமாகவே முடித்து விடுகிறேன். நீங்கள் தயவு செய்து மன்னித்துக்கொண்டு இப்போது வேலைக்குப் போங்கள். இம்மாதிரி கூட்டமும் கலாட்டாவும் பிறரறிந்தால் மிகவும் விகாரமாகப் போய்விடும்; ஆகையால் நீங்கள் தயவு செய்து என் வார்த்தையில் மதிப்பு வையுங்கள்!' என்று சமாதானம் செய்து, கூட்டத்தின் தலைவன் கையில் 40 ரூபாயை வைத்து அமுக்கி கூட்டத்தைக் கலைத்து விட்டு, விசிலடித்துப் பாடிக்கொண்டே உள்ளே சென்ருன்.

மைனரின் முன்பக்கத்து அறைக் கதவு தாளிடப்பட்டிருந்ததால் இடித்தான்; பதிலொன்றுமில்லை. மீண்டும், மீண்டும் " சார்!

சார்!" என்று கத்தினான். பதிலில்லாமையால் ஏணியைக் கொண்டு போட்டுக்கொண்டு ஏறி, மேல் வெண்டிலேட்டரால் எட்டிப் பார்த்தான். இவனுக்குள்ள ஆத்திரத்தில் ஏணி சரியாக இருக்கிறதா இல்லையா வென்றதையுங் கவனிக்காமல் ஏறிவிட்டதால் ஏணி சறுக்கி தடாரென்று விழுந்தது. அதோடு அவனும் விழுந்து விடாமல் வெண்டிலேட்டரின் இரும்புக் கம்பியைப் பிடித்துக் கொண்டு தொங்கலாடினான்.

இந்த ஓசையைக் கேட்டு, வீதிப் பக்கமிருந்த தோட்டக் காரனும், ட்ரைவரும் ஓடி வந்தார்கள். "ஐயையோ! இதென்ன சார் கங்காராம்! என்ன பாக்கிறீங்க? ஒரு வேளை அந்த பார்ஸி லேடியை நீங்கதான் ஏற்பாடு செய்தீர்களா! அந்தம்மாள் இருக்கிறாளா, போய்விட்டாளாவென்று பாக்கிறீங்களா! அதில் இனிமே சந்தேகமில்லே.

அம்மாள் ஓசை படாமல் எழுந்து தோட்டத்து வழியாய் போய்விட்டாங்க" என்று ட்ரைவர் கூறும்போது "என்ன! பார்ஸி லேடியா?" என்று அதிர்ச்சியுடன் சொல்கையில் கங்காராமின் கைகள் பிடியிலிருந்து விட்டு விட்டதால், தடாரென்று தோட்டக்காரன் தலைமீது விழுந்து, மாலையிட உட்காரும் மாப்பிள்ளையைப் போல் தோளில் உட்கார்ந்தான்.

தோட்டக்காரன் குய்யோ முறையோவென்று கூச்சலிட்டுக் கொண்டு கங்காராமை கீழே தபாரென்று போட்டான். சுருட்டியடித்துக்கொண்டு எழுந்த கங்காராம் "என்னப்பா! நீ தெரிவிப்பது ஒன்றும் புரியவில்லையே; எப்போது பார்ஸி லேடி வந்தாள்?" என்று ட்ரைவரைக் கேட்டான்.

ட்ரைவர்:—நான் அதெல்லாம் கண்டேனு சார்? காலையில் பின் தோட்டத்துப் பக்கத்தில் நான் இருந்தபோது ஒரு பார்ஸி லேடி வெகு அவசரமாக முக்காடுடன் வேகமாய் நடந்து செல்வதைக் கண்டு, நான் எதிரே சென்று "நீ யாரம்மா? எங்கே போகிறாய்?"....என்று கேட்டேன். நான் கேட்பதைச் சற்றும் லக்ஷ்யம் செய்யாமலும், என்னை திரும்பிக்கூடப் பார்க்காமலும் ஒரே ஓட்டமாக ஓடிவிட்டாள். நானும் பின்னால் ஓடிப் பார்த்தேன். தடுக்கி விழுந்து காலை உடைத்துக் கொண்டதுதான் மிஞ்சியது. மைனர் சக்கையா தூங்குகிறாப்போலிருக்கிறது.

கங்காராமுக்கு இது மிகவும் ஆச்சரியமாயும் வேடிக்கையாயும் தோன்றியது. நேரே இன்னொரு பக்கத்துக் கதவு வழியால்

உள்ளே ஓடினான். ட்ரைவரும் பின் சென்றான். உள்ளே பார்த்தால் ஆளைக் காணவில்லை. ரூம் காலியாயிருந்தது. எங்கு சுற்றிப் பார்த்தும் ஒருவித சின்னமும் இல்லை. மேஜைமீது ஒரு சிறு கடிதம் இருந்தது. அதை கங்காராம் எடுத்துப் பார்த்தான்.

"என் ப்ரிய நண்பா!

நான் வெகு முக்யமானதும் அவசரமானதுமான ஓர் ரகஸ்ய வேலையாய் ஒரு நண்பனுடன் போகிறேன். நான் பிறகு உனக்குத் தகவல் கொடுக்கும் வரையில் நான் ஊரில் இல்லை என்பதையே குறிப்பிடாதே. மில் வேலைகளை கவனித்து வா!

இங்ஙனம்: ஜமீந்தார்"

அதை மடித்து ஜேபியில் போட்டுக்கொண்டான். ட்ரைவர் "என்ன?" என்று கேட்டதற்கு "ஏதோ அவசர ஜோலியாய் ஊருக்குப் போயிருக்கிறாராம்" என்று மட்டும் கூறினான். பக்காத் திருடனில் நம்பர் ஒன்றாகிய ட்ரைவருக்கு விஷயம் தெரிந்திருக்கையில் இவனை இன்னும் எதற்குக் கேட்கவேண்டும்? அம்மட்டும் போய்விட்டான். உண்மையறியாத கங்காராம் ஏதோ முக்யமான சொந்த அலுவலால்தான் ஊருக்குப் போயிருக்கிறார் என்றே நம்பிவிட்டான்.

---

## 16-வது அதிகாரம்

### அண்டப் புளுகும் ஆகாயப் பந்தலும்

வெட்கமும் துக்கமும் பாதித்தவாறு, ஐயோ பாவம்! ஜெமீந்தார் முட்டாக்குடன் ஓர் புதரில் மறைந்துவிட்ட பின்னரும் ட்ரைவர் எங்கே தன்னைத் தேடிக்கொண்டு இங்கு வந்து விடுவானோ, தன்னை இன்னிலைமையில் எங்கே பார்த்து விடுகிறானோ என்ற பெரிய பயத்தினால், மூச்சைப் பிடித்துக் கொண்டு கட்டித் தடுமாறி தடுக்கி விழுந்தும், திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டும் ஓடினார்.

சுமார் 10 நிமிட நேரம் ஓடிய பிறகே தன்னை யாரும் துரத்திக்கொண்டு வரவில்லை என்ற நம்பிக்கை ஏற்பட்டதால்,

மூச்சு திணற ஒரு மரத்தடியில் சற்று சாய்ந்து கொண்டு நின்றார். அப்புதரில் எங்கேனும் சிறு சப்தங்கள் உண்டாகியபோதிலும் திடுக்கிட்டு நடுநடுங்குவார். நாற்புறமும் சுற்றிப் பார்த்து ட்ரைவர்தான் வந்து விட்டான் என்று எண்ணி ஓடவாரம் பிப்பார்; பிறகு சற்று சமாளிப்பார்.

இத்தனை சங்கடத்திற்கு மத்தியில் தன்னை இந்த கோலத் திற்கு அந்த த்ரோகிகள் தான் ஆளாக்கி இருக்கவேண்டும் என்ற ஆத்திரம் அக்கினி ஜ்வாலையாய் எரிகிறது. கையையும் காலையும் உதறுகிறார். பல்லைக் கடிக்கிறார். தன் ஜேபியிலுள்ள சிறு கண்ணாடியால் முகத்தைப் பார்க்கிறார். உடனே ஆத்திரம் காட்டு வெள்ளம்போல் பொங்குகிறது. அனுசூயாவையும், அவள் புருஷனையும் பனங்காய் சீவுவதுபோல் சீவி விடலாமாவென்று துடிக்கிறார்.

ஏற்கெனவே ஊனமான காலுடன் இத்தனை தூரம் ஓடி வந்ததால், கால் அதற்கு மேல் நடக்கமாட்டாது தள்ளாடித் துவள வாரம்பித்தது. கோபம், வெட்கம், துக்கம், ஆத்திரம், பசி எல்லாம் ஒன்று சேர்ந்து வதைக்கின்றன. அந்த புதரில் இவருக்குச் சாப்பிட என்னதான் கிடைக்கும்? காட்டு களாக் காய்களும், நாவல் மரத்தில் சில காய்களும் இவர் கண்ணிற்குப் பட்டன. குடல் காய்ந்தால் குதிரையும் வைக்கோல் தின்னும் என்ற பழமொழிப்படிக்கு வயிற்றில் செய்யும் வேதனை தாங்காது அவைகளையும் பொறுக்கித் தின்றார்.

பகல் பொழுதை பயந்தவாறு மெல்ல அங்கேயே மரத் தடியில் கழித்து விட்டு, மாலை இருள் சூழ்ந்த பிறகு நடக்க மாட்டாது நடந்து அருகிலுள்ள கிராமத்து வீட்டிற்குச் சென்றார். ஒவ்வொரு முறையும் இவர் கிராமத்துக்கு வருவதற்கு முன்பே பெருத்த தடபுடல்கள் நடக்கும். பலவித அட்டகாஸமான ஏற்பாடு களுடன் வரும் மைனர், திடீரென்று இரவில் வந்ததும் அங்குள்ள வேலைக்காரனுக்கு இவரை யாரென்றே புரியவில்லை. முக்காடு சேலைபோல் இருந்ததை நீக்கிவிட்டு சாதாரண முக்காட்டுடன் வந்ததால் யாரோ ஆண்பிள்ளை என்று மட்டும் தெரிந்தது.

"யாரு சாமீ?" என்று வேலைக்காரன் மரியாதையாய்க் கேட்டான். மைனருக்கு உண்டான சங்கடத்திற்குக் கூற வேண்டுமா? ஏற்கெனவே பகலெல்லாம் அந்த தோப்புக்குள் ளிருந்து யோசித்து முடிவு கட்டியிருந்தபடியே கடகடவென்று சிரித்துப் பின் "மன்னாரு! என்ன சேதி? நான் தெரியல்லையா?" என்று இழுத்தார்ப்போல் கூறினார்.

வேலைக்காரனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. "ஹா.... எசமாங்களா! எசமாங்களா! இதென்ன சாமீ! இப்பிடி திடீன்னு சொல்லாமெ கொள்ளாமெ வந்தீங்களே! இந்த நாயிக்குத் தெரிஞ்சா முன்னே மாதிரி அல்லாம் ஏற்பாடா வச்சிருக்கா துங்களா! இப்பிடி திடீன்னு வந்ததே இல்லீங்களே! இந்த ஒரு கட்டைக்கு வெளக்கு என்னுன்னுட்டு, காடா வௌக்கு ஒண்ணு மட்டும் ஊட்டு உள்ளற வச்சிருக்கேன்; இதோ கொண்டாறேன்.

மைனர் :—தே....மன்னுரு! கூச்சலிடாதே. நான் ஓர் முக்கியமான காரியமாக வந்திருப்பதால் சொல்லாமல், கொள்ளாமல் ரகஸியமாய் வந்து விட்டேன். விளக்கு வேண்டாம். ஒன்றும் வேண்டாம். நீ சத்தம் போடாதே. நான் இப்போ ஒரு பெரிய பக்காத் திருடனைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறேன்.

மன்னு :—ஐயயோ! திருடன் இங்கேயா இருக்கருன்?

மைனர் :—தே....என்னடா! அசடு மாதிரி கத்தரே. திருடன் இங்கே இல்லேடா! போலீஸார் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிருர்கள். அதாவது,—ஒரு பெரிய பக்காத்திருடன் சிறையிலிருந்து தப்பித்துக்கொண்டு போய்விட்டானும். அவனை பிடிக்கிறவாளுக்கு 20,000 ரூபா இனும் தருவதாகச் சொல்லியிருக்கிருர்கள். அத்திருடனை நாம் தான் பிடிக்கலாமே என்று.....

மன்னு :—(இடை மறுத்து) எசமான்! எசமான்! இந்த எயவு எல்லாம் ஒங்கிளிக்கி எதுக்குங்குறேன்?....அந்த இருபதாயிரம் ரூபா ஒங்கிளிக்கில்லேயா? எத்தனை லச்சம் லச்சமா எசமானுக்கு ரூபா இருக்குதுங்களே.....அந்தத் திருட்டுக் களையுதெங்க எசமானுக்கு ஏதாச்சும் ஆபத்து செஞ்சுட்டாக்கா? பயமாக் கீதுங்களே.....

மைனர் :—(மன்னுரை கட்டிக் கொடுத்து) அடே பயித்தியமே!....ஆபத்தாவது மண்ணுங்கட்டியாவது? எனக்கு ரூபா ப்ரதானமில்லேடா....போலீஸாரால் முடியாது போன ஒரு பெரிய திருடனை நான் கண்டுபுடிச்சுட்டேன்னு எத்தனையோ கவுரவமில்லேயோ? கவர்னர் துரையே என்னேடு கை குலுக்குவாரே. அந்த ரூபா எனக்கு எதற்கு? இந்த காரியத்தில் எனக்கு உதவி செய்யும் உங்கள் எல்லோருக்கும் அதைப் பங்கு போட்டுக் குடுத்து விட மாட்டேனு? (இச்சமயம் மன்னுருக்கு காசின் ஆசை மோகம் தலைக்கேறுகிறது. கையைக் குழைத்துக்கொண்டு எசமான் முகத்தை ஏற இறங்க கிட்ட வந்து பார்க்கிருன். அலறியவாறு "ஐயயோ!....என்னு எசமான்!....ஒரு மீசையும், ஒரு புருவமும் காணுமே?"—என்று நடுக்கத்துடன் கேட்டான்.

மைனர் :—ஹி ஹி ஹி !....இதோ பாரு ; இன்னும் வேடிக்கையாயிருக்கும்....என்று தலை முட்டாக்கை அவிழ்த்துவிட்டு நிற்கிறார். வயிற்றுக்குள் செய்யும் சங்கடமோ சொல்லமுடியாது. மேனுக்கு எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு சிரிக்கார்.

மன்னு :—ஐயயோ ! எசமான் ! இதென்ன ஐங்குடுமிம்பாங்களே....அதுபோலக் கிதே....அந்த திருட்டுப் பயங்க இப்பிடி எதாச்சும் சேஞ்சுப்புட்டாங்களா.....சாமீ !

மைனர் :—மன்னுரு! இந்த மைனரையாவது திருடன் தொடுவதாவது? இதெல்லாம் ஒரு விரத்தனம்பா......போலீஸில் துப்பறியும் வேலென்னு சாமான்யமா?....ஒரு திருடனைப் பிடிக்க....ஒரு கொலையாளியைப் பிடிக்க துப்பறியும் உத்யோகஸ்தர் எத்தனை வேஷம் போடுவார் தெரியுமா ? ஐயோ பாவம் ! நீ பட்டிக்காட்டான் உனக்கென்ன தெரியும்? நீ படித்தவனு இருந்தாலும் துப்பறியும் கதைகள் படித்துத் தெரிந்துகொள்ளலாம். உனக்கு அக்கேடும் இல்லை. நான் சொல்றேன் கேளு. துப்பறியும் வேலை செய்யும் மனிதர் பெண் வேஷம் போடணும், குடுகுடுபாண்டி, பைராகி, பிச்சைக்காரன், பைத்தியக்காரன் இன்னும் எத்தனையோ வேஷங்கள் போட்டு அந்த திருடனைக் கண்டு பிடிப்பார்கள்.

**நா**ன் அந்த பக்காத் திருடனைப் பிடிப்பதற்காக முதலில் பைத்தியக்காரன் வேஷம் போட்டேன். அதற்கு இம்மாதிரி ஐங்குடுமி, ஒத்த மீசை, ஒத்தெ புருவம் இந்த அலங்காரம் எல்லாம் செய்துகொண்டு திருடன் இருப்பிடத்தைக் கண்டு பிடித்துவிட்டேன்.

மன்னு :—எசமான் ! நிசமாங்களா? ஆனு இருபதாயிரம் ரூபா வந்திடுச்சுங்களா? திருடன் எங்கேக் கீரானுங்க....நானுங் கூட வாரேனுங்க........பைத்தியக்கார வேசம் பலே ஜோராக் கீதுங்களே.....

மைனர் :—சத்தே பொறுப்பா....அவனைப்பிடித்து போலீஸார் கையிலெ குடுத்தப்பறந்தான் பணம் வரும். அதுக்குள் அவசரப்படுகிறுயே. இப்ப இருக்கிற இடம் தெரிந்துவிட்டது. நீ இப்போதே போய் ரகஸியமாக நம்ப அம்பட்டனை அழைத்து வா. நான் இரவோடிரவாக முழுத்தலையும் மொட்டையடித்துக் கொண்டு, தாடி மீசை கட்டிக்கொண்டு சாயபு வேஷத்துடன் போய் அந்த திருடனை பிடித்துக் கொடுத்துவிட்டு பணத்தை வாங்கியாறப் போறேன். நான் இங்கு வந்தது, இப்படி செய்தது, இங்கு இருப்பது ஒன்றும் பிறருக்குத் தெரியவே கூடாது. தெரிந்

தால் திருடன் இங்கு வந்து நம்மை வீட்டோடு கொளுத்தி விடுவான். தெரியுமா? சீக்கிரம் அம்பட்டனை அழைத்து வா!" என்றான். வாய் பேசுகிறதேயன்றி வயிறு எரிகிறது.

மன்னாரு ஓட்டமாக ஓடி அடுத்த நிமிடமே அம்பட்ட கருப்ப னுடன் வந்து சேர்ந்தான். "அடே கருப்பா!....நமக்கெல்லாம் நல்ல காலம் பறந்துடுச்சிடா....ஐயா சங்கதி வெளியெ மூச்சு விடாமெ அவர் சொல்றபடி கேளு........" உம்....ஆவுட்டம்" என்றான். வயிறு எரியும் சங்கடத்துடன் மைனர் உட்கார்ந்தார். கருப்பன் மைனரின் தலையில் கத்தியை வைத்துக்கொண்டே "எசமான்! முழு பொட்டேதானுங்களே....ஏதோ நாங்க எயெ.... புள்ளே குட்டிக்காரங்க....அல்லா விசயமும் மன்னாரு சொல்லீட் டான். அவங்க அல்லாரையும் விட அதிகமா கயிஷ்ட பட்றவன் நான்தானுங்க. என் வேலெ தெறமெயாலேதானுங்க எசமான்! அசல் சாயப்பு மாதிரியே இருக்கப்போறீங்க.

எசமான்! இந்த நாயிக்கு பங்குலே கொஞ்சம் அதிகம் கொடுக்கணுங்க" என்று ஆரம்பித்தான். மைனர் என்ன செய்வார் பாவம்! இதயத்தில் செய்யும் சங்கடமோ சொல்லத் திறமில்லை. தலையோ அம்பட்டன் கத்தியில் அகப்பட்டிருக்கிறது. இப்போது அவனுக்கு த்ருப்தியாகச் சொல்லாவிட்டால் தலை தப்புவது தம்பிரான் புண்யமாகி விடும்.....என்ன செய்வதென்று தத்த ளித்தார்.

மெல்லிய குரலால் "கருப்பா! இதெல்லாம் நீ சொல்லியா நான் தெரியவேண்டும்? உனக்கு ஒன்னரை பங்கு என்பது ஞாபக மிருக்கட்டும். ஆனால், நான் இங்கிருப்பதே பிறருக்குத் தெரியக்கூடாது. தெரிந்தால் அந்த திருடன் இதில் சம்மந்தப் பட்டவர்கள் எல்லோரையும் சுட்டுக் கொன்று விடுவானாம். ஆகையால், இந்த விஷயம் பரம ரகஸியமாயிருக்க வேணும் பிறகு பாரேன்" என்று தட்டிக் கொடுத்தார்.

கருப்பனின் வேலை முடிந்தது. வீட்டில் அடுக்கியிருந்த ஒரு மூட்டை நெல்லை கருப்பனுக்குத் தள்ளிவிட்டார். கருப்பன் கனவு கண்டு கொண்டே மூட்டையுடன் நடக்கவாரம்பித்தான். மைனர், மன்னாருவை யழைத்து "மன்னாரு! இந்த வீட்டில் நானிருப்பதே யாருக்கும் தெரியக்கூடாது. தினம் நீ எப்படி இருப்பாயோ அப்படியே இரு. நெல் களஞ்சியங்களுக்குப்பின்னால் கயித்துக் கட்டிலைப் போடு. நான் அங்கேயே இருந்து என் வேலை யைச் செய்கிறேன். தெரிந்ததா?....குறைந்தது உன் பங்கிற்கு 5 ஆயிரமாவது வரும்னு நெனைக்கிறேன். ஜாக்ரதை" என்றார்.

**கா**சாசைக் கயிற்றில் ஆடாத மனித பம்பரம் உலகில் உண்டா?........மைனர் பகலெல்லாம் பட்டினியும் களைப்புமா யிருந்து ஓடி வந்ததால், அலுப்பு தீர மன்னாருவை கிணத்தில் தண்ணீர் இழுத்துக் கொட்டச் செய்து ஸ்நானம் செய்தார். பின்னர், "மன்னாரு! பசிக்கிறது. ஏதாவது தின்பதற்கு இருக் கிறதா?" என்றார்.

**ம**ன்னாரு ஓடிப்போய் தோட்டத்திலிருந்து பறித்த வாழைப் பழம், மாம்பழம், இளநீர் முதலியவைகளைக் கொணர்ந்து வைத்து "எஜமான்! நாளை சந்தையிலே விக்கரத்துக்கு இன்னிக்கு தானுங்க இதெல்லாம் பறிச்சேன். சாப்புடுங்க" என்றான். மைனருக்கிருந்த பசியில் வாழைப்பழத்தை சீப்பு சீப்பாக முறித்து விட்டார். மாம்பழமும் கொட்டைகள் மீறுவதே பஞ்சமா யிருந்தது. இளநீரையும் ஒரு கை பார்த்துவிட்டு, பெரிய ஏப்பம் விட்டுக்கொண்டே கையைத் துடைத்துக் கொண்டார்.

**த**ன் தலையின் முந்திய கோரம் வாங்கியதே பெரிய பாரம் நீங்கியதாகத் தோன்றியது. முழு மொட்டைக்குக் காரணம் பல ப்ரார்த்தனைகளைக் கூறி ஏய்த்து விடலாம். இந்த மட்டும் ஐங் குடுமியோடு மன்னாருவும், கருப்பனும் மட்டும் பார்த்தது போதும்" என்ற பெரிய மனச்சாந்தியுடன் "மன்னாரு! நான் தூங்கி மூன்று நாளாகிவிட்டது. நீயும் படுத்துக்கொள். நானும் தூங்குகிறேன்" என்று கூறிவிட்டுப் படுத்தார்.

**அ**வருக்குள்ள வேதனையிலும், சங்கடத்திலும் தூக்கம் எப் படி வரும்? எந்த விதத்தில் அந்த அனுசூயாவைப் பழிக்குப் பழி வாங்குவது? இனிமேல் அவளை நான் மரியாதையாக ஒருபோதும் நடத்தப்போவதில்லை. அவளை பழிக்குப் பழி வாங்கி, கற்பழித்து அவள் புருஷனைச் சித்திரவதை செய்து என் கண்ணாறக் காணா விடில் நான் ஒரு மனிதனல்ல; இருக்கட்டும்.

**அ**டீ த்ரோகி! அனுசூயா!....சண்டாள மகாதேவா!.... உங்கள் வாழ்வும், குதிப்பும் எம்மட்டும் நடக்கிறதோ பார்க்கிறேன். என்னை இத்தகைய அவமானம் செய்துவிட்ட உங்களையா நான் இனி சும்மா விடுவேன்?.....ஹதம்....ஹதம் செய்துவிடுகிறேன்; பாருங்கள். உங்கள் காதல் வாழ்க்கையைக் கடலில் கரைத்து விடுகிறேன் பாருங்கள்" என்று தன்னுள் விம்முகிறார்; புரளு கிறார். எந்த வகையில் பழி வாங்கலாமென்று சதியாலோசனை யுலகில் மெய் மறந்து ப்ரவேசித்தார்.

---

## 17-வது அதிகாரம்

### உன்னுலே நான் கெட்டேன்; என்னுலே நீ கெட்டாய்

அனுசூயாவின் மனத்தில் கவலையும் துக்கமும் தவிர வேறு சந்தோஷமென்பதே அற்றுவிட்டது. "அத்தான்! நாம் இத்தனை கஷ்டப்பட்டுக்கொண்டு இங்கு தவிப்பதைவிட எங்காவது போய்விட்டால் என்ன? நம்மீது வஞ்சங்கொண்டுள்ள அப் பாவி மைனரால் இன்னும் ஏதாவது தீங்குகள் விளைந்து விடுமோவென்றுதான் பயமாயிருக்கிறது. ஏதோ அவனுக்கு நல்ல புத்தி வரட்டுமென்று நாம் செய்த வேலை நமக்கே எமனுகி விட்டால் என்ன செய்வது?" என்ருள்.

மகா :—ஓகோ! விஷயம் உனக்குத் தெரியாதா! இனி அவன் ஒரே உலகத்திற்குச் செல்வதற்குத் தான் சக்தியுண்டு. அவனுடைய மில்லில் மின்சார விசையால் ஒரு தினம் இரவு தீப்பிடித்துக்கொண்டு, மில் பூராவும் பஸ்மமாகி விட்ட செய்தி உனக்குத் தெரியாதா? கடன் என்கிற வ்யாதி அவனை அரித்து வந்த ரகஸியமும் இப்போது வெளியாகிவிட்டது.

இந்த பெரிய பேரிடி போன்ற விஷயத்தைக் கேட்டதும், அவனுக்கு இந்த அதிர்ச்சி தாங்காது முன்பு கண்டு தெளிந்த பாரிச வாயுவு உடனே வந்து அடியோடு கால்கள், கைகள், பாதி வாய் எல்லாம் போய், பாயும் படுக்கையுமாய் கிடக்கிருனும். டிரைவர் சொன்னுன். அவன் செய்த சதிகள் அவனை விடுமா என்ன? இனி அவனுல் நமக்கு பயமில்லை, எல்லாவற்றையும் விட நாம் செய்துள்ள விதிதான் நம்மைச் சோதிக்கிறது.

அனு :—அப்படியா? இந்த சமாச்சாரம் ஒன்றும் எனக்குத் தெரியாதே. அது கிடக்கட்டும். வீட்டு வாடகை அசாத்யமாகச் சேர்ந்துவிட்டதால் வீட்டுக்காரி நேற்று கன்னுபின்னுவென்று திட்டினுள். நான் எத்தனையோ சமாதானம் சொல்லியும் கேட்க வில்லை. வியாதியால் படுத்த குழந்தைக்கு வைத்தியம் செய்ய முடியாது அது இறந்துவிட்ட துக்கத்தையும் அந்தம்மாள் பொருள் படுத்தாது "பணத்தை வைக்கிருயா, சட்டிப்பானையை

வீதியில் போடட்டுமா?" என்று கேட்கிருள். நான் என்ன செய்வேன்?

மகா:—வீட்டுக்காரன் என்னையுந்தான் கண்டிப்பாய் கேட்டு வீதியில் பலபேர் முன்னிலையில் திட்டினுன். நாம் இம்மாதிரி கேட்க வேண்டிய தலைவிதி. என்ன செய்வது? அவன் எப்படி வழி விடுகிருனே பார்ப்போம்.

அனு:—அத்தான்! நான் ஒரு காரியம் செய்யத் தீர்மானித்து விட்டேன். அதாவது,—நாம் கண்ணியமாக பிழைப்பதற்கு நல்ல ஒழுக்கமான முறையில் எந்த வேலையைச் செய்தால்தான் என்ன? இந்த வீட்டுக்கார அம்மாளுக்கு சமையல் வேலை செய்வதற்கு ஆள் வேண்டுமென்று தேடுகிருர்களாம். நானே அந்த வேலையைச் செய்து சில மாதத்திற்குள்ளேயே வாடகைப் பாக்கியையும் கழித்துவிட்டு நமது குழந்தைகளுக்கும் கால் வயிறு கஞ்சி வார்க்க லாம். இதைப்பற்றி நீங்கள் எதுவும் வித்யாசமாக நினைக்கக் கூடாது" என்ருள்.

மகா:—ஐயோ! நீயா சமையல் செய்வது? அதைக் கண்டு நானு சகிப்பது? ஐயோ! என்ன கஷ்ட காலம்! என்ன கர்மத்தைச் செய்து பிறந்தேன்? ஹா.... அனுசூயா! (அவள் மெல்லிய கரங்களை எடுத்து கண்ணில் ஒற்றிக்கொண்டு) இந்த அருமையான கரங்கள் இப்பாவிக்கு மாலையிட்டதன் பலனுலல்லவோ அல்லல் படுகின்றன! என்ன செய்வேன்?—என்று கண்ணீர் உகிர்த்தான்.

**நா**ட்கள் தட்டா மாலை சுற்றுவதுபோல் சுற்றிக்கொண்டு ஓடிவிட்டன. பத்து பேருக்குத் தன் தாய் எஜமானியாயிருந்து வேலை வாங்கி அதட்டிய காலத்தின் நினைவு முற்றும் அனுசூயாவின் மனத்தில் போராடுகிறது. "அந்த வேலைக்காரர்களின் நெஞ்சமும் இவ்விதந்தானே தவித்திருக்கும்? இந்த அனுபவத்தை நேரில் அறியும் பொருட்டே கடவுள் எனக்கு இம்மாதிரி சோதனையைக் காட்டுகிருர் போலும்" என்றெல்லாம் அனுசூயா வேலை செய்யும் போது மனத்தில் நினைத்துக் கண்ணீர் விட்டுக் கதறிக் குன்றிப் போய்விட்டாள்.

* * * *

**மை**னரின் மில் எரிந்து போய்விட்ட செய்தியைக் கேட்டதும் அந்த அதிர்ச்சியால் அடியோடு கீழே விழுந்துவிட்ட பின்னர், மன்னுருவும் அம்பட்ட கருப்பனும் முன்பு மைனர் கூறியது முற்றும் பொய்யானது, முழு ஏமாற்றமானது என்று தெரிந்து கொண்டார்கள். இதை வெளியிட்டு மைனரை அவமானப்படுத்தி விடலாமா என்றும் எண்ணினர்கள். ஆனுல் மைன ருக்கு ஞாபகம் தப்பிவிடவில்லை யாதலால், இவர்கள் தன்மீது

வேறு விதமாக இருப்பதை யறிந்ததும் மன்னுருவை அழைத்து வழவழ, கொழ கொழாவென்று வாய் தழதழத்தபடியே பேசத் தொடங்கி,

"மழ்ணுழு. நீ கோழ்ச்சிக்காதே.... நான் இப்பழி உழுந் துட்டழ்தாலே.... திழுழன் பிழிக்க முழியல்லே....நீழ்ங்க....இதெ வெழிழே ஷொல்லாதேழ்ங்க....இந்தா....ஒனக்கு இழு....இழு கழுப்பழ்கு. என்னெ கை விழாதே....நீதான்....னேக்கு உழ்மை தோழன்" என்று தடுமாறியவாறு பேசிக் கண்ணீர்விட்டு, தன் கையிலிருந்த இரண்டு வைர மோதிரங்களைக் கழட்டிக் கொள்ளச் செய்தார்.

மன்னுரு பழய காலம் முதல் வேலையிலிருக்கும் உண்மை ஊழியனுகையால், தன் எஜமானன் சொல்லிய உடனே மனம் மிகவும் இளகிவிட்டது. "எஜமான்! நான் உசிரோடெ இருக்கற வரெக்கும் நானு ஒங்கிளிக்கி சேஞ்சி புட்ரேங்க. ஒங்க மனசிலே ஒன்னும் வச்சிக்காதிங்க. கருப்பனுக்கு மட்டும் இதெ குடுத்துப் புட்ரெனுங்க." என்று ஒரு மோதிரத்தை மட்டும் கழட்டிக் கொண்டான்.

மைனர் மன்னுருவைக் கெஞ்சிக் கேட்டதால் அவனும் ஒரு மோதிரம் எடுத்துக் கொண்டான். மைனரின் அகங்காரங் களும் திமிரும் ஒடுங்கிவிட்ட பின்னர், இதற்கு முன்னர் வெல் லத்தை ஈ மொய்ப்பதுபோல் மொய்த்துக் கொண்டிருந்த நண்பர் களின் கூட்டம் எப்படியோ மறைந்தது. கறக்கும் பசுவிடந்தானே கறக்கிறவர்கள் சேருவார்கள். கறவை மறந்த பிறகு அந்த பசுவுக்கு வைக்கோல் போடவும் மறந்து விடுவார்களல்லவா? அதுபோல் இந்த மைனர் கறவை மறந்துப்போய் விட்டபிறகு ஒருவரும் கிட்டே வராது விலகிவிட்டார்கள்.

மைனர் எத்தனையோ தரம் சொல்லியனுப்பிய பிறகு கங்கா ராம் மட்டும் வந்து எட்டிப் பார்த்தான். சரியாகப் பேசவும் மனம் பிடிக்காதவன்போல் கடுகடுப்பாகவே முகத்தை வைத்துக் கொண்டு "என்ன சமாச்சாரம்! உன்னை நம்பி உன்னோடு சேர்ந்த தற்கு நானும் உருப்படாமல் குட்டிச் சுவராகிவிட்டேன். காலணு இல்லாமல் கடன்காரனுய் நின்று விட்டேன். இன்னும் என் என் ப்ராணனை வாங்க அழைக்கிறுய்?

மைனரின் மனது பத்தி எரிந்தது. "அட பாவி! உன்னுல் தானே நான் இந்த கதிக்கு வந்தேன். உன் துர்ப்போதனை இல்லாவிட்டால் நான் அந்த அனுசூயாவை அம்மட்டுடன் விட்டிருப்பேனே! படுபாவி! நீதானே சகலத்திலும் என்னைக்

கெடுத்து, என் சொத்துக்களையும் அபகரித்து என்னை இந்த கதிக்கும் ஆளாக்கினாய்....சண்டாள த்ரோகி!" என்று தன் தழதழத்த வாயுடன் இழுத்து இழுத்துப் பேசினார்.

கங்காராமுக்கு ஆத்திரம் பொங்கியது. "ஆமாம்....நீ நெருப்பாய் எரிந்தாய்; நான் காற்றாய் அடித்தேன். அவ்விரண்டின் வேகம் நம்மிருவருடைய வாழ்க்கையையுமே எரித்துவிட்டது. என் தாயாரும், மனைவியும் உன்னோடு சேர வேண்டாம் என்று முட்டிக் கொண்டதை சற்றும் மதியாமலும், லக்ஷியம் செய்யாமலும் நெருப்பில் விழுந்தேன். என்னுடைய வேதனையே பெருந் தீயாகி என் குடும்பத்தையும் அழித்து விட்டது.

இத்தனைக்கும் காரணம் நீதான். இனி உன் முகத்திலும் நான் விழிக்கத் தயாராக இல்லை. மக்கள் மனைவி, மாதா பிதா எல்லோரையும் இழந்து ஒண்டிக் கட்டையாகி விட்டேன். இனி என் கட்டை எக்கேடு கெட்டாலென்ன? எருக்கு முளைத்தால் என்ன? உன் துர்ப்புத்தியால் மகாதேவனுக்கு நானே விளைவித்த தீங்குகள் முற்றும் இப்போது என்னையே சுற்றிக்கொண்டன. இனி அனுபவிக்க அஞ்சினால் விடுமா? சீச்சீ!....ராக்ஷஸனுக்கு ஒப்பான உன்னுடன் சகவாஸம் செய்தது போதும்" என்று கண்டிப்பாயும் ஆத்திரத்துடனும் கூறிவிட்டு, "நீ செய்த அக்ரமங்களுக்கு நீயும் அனுபவித்து வருந்து. கடவுள் உனக்கு சாவைக் கொடுக்கவே கூடாது. தீர்க்காயுசைக் கொடுத்து வாட்டி வருத்த வேண்டும்" என்று மனமாற வயிறெரியத் திட்டிக் கொண்டே சென்றான்.

மைனரின் இதயம் பிளந்துவிடும்போலாகிவிட்டது. அவன் கூறுவது முற்றும் உண்மைதான் என்று அவன் மனச்சாக்ஷி கூறுவதுபோல் ஒரு வித உணர்ச்சியுண்டாகியதும் ஆதி முதல் தான் மனந் துணிந்து செய்த ஒவ்வொரு துஷ்க்ருத்யமும், அவன் மூளைக்கு முன் தாண்டவமாடத் தொடங்கியது. ஓர் பூர்ண கர்ப்பிணிமீது கார் ஏற்றியதையும், அனுசூயாவுக்கும் மகாதேவனுக்கும் செய்த தீங்குகளையும் எல்லாம் இப்போது மனக்கண் முன்பு பார்க்கையில் முன்னிலும் பதினாயிர மடங்கு வேதனையும், புத்தியில் மாறுதலும், சகிக்கக் கூடாத அபாரமான சங்கடமும் உண்டாகி விட்டன.

இம்மாதிரி தான் செய்த கன் முடிவின் பலன் எப்படியாயிற்று என்று ஒரு சிறிது நினைக்கும்போது அனுசூயா கந்தல் உடையுடன் அடிமை வேலை செய்யும் காக்ஷியும், குழந்தைகளின் பசிக் கொடுமையும், மகாதேவனின் தத்தளிப்பும் கண் முன்பு

தெரிந்தன. இதற்கு முன்பு அனுசூயாவைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் விகார உணர்ச்சி இவனை வாட்டி, அதே கண்களால் பார்த்து விம்மும் உணர்ச்சிக்கு நேர் மாறாக அனுசூயாவின் உருவமும், மகாதேவனின் உருவமும் ஓர் வீரபத்திர காளி போல் தோன்றி "என் வாழ்க்கையை பாழ்படுத்திய பாதகா! பார் உன்னை ஹதம் செய்கிறேன்." என்று கர்ஜிப்பதுபோன்ற ஓர் பயங்கரமும், தெய்வத் தோற்றமும் உண்டாகி மைனரை நிலை கலங்கச் செய்து விட்டன.

அத்தனை பலஹீனமான நிலைமையில் இத்தகைய மனோ அதிர்ச்சி தாங்காமல், ஆயாச மேலீட்டால் கண்களை மூடிச் சோர்ந்து விட்டார். உள் ரகஸியத்தை யறியாத மன்ஞரு எசமானுக்கு ஏதோ அந்திய காலம் திடீரென்று வந்துவிட்டதாகவே எண்ணி பதறிப்போய் "எசமான்! எசமான்!" என்று கதறியழ வாரம்பித்தான்.

---

## 18-வது அதிகாரம்

### பூகம்பம்! பூகம்பம்! வறுமையே பூகம்பம்

மகாதேவனின் துக்கம் பொங்கிப் பொங்கி அவன் மூச்சையே நிறுத்தி விடும்போலாய்விட்டது. இத்தனை துக்கம் ஒரே யடியாய் பொங்குவதற்குக் காரணம் அவன் வேலைக்கு அலைந்து திரிந்துவிட்டு எங்கும் ஒன்றும் அகப்படாமல் வீதியில் வரும்போது கண்ட ஒரு காட்சியேயாகும்.

அதாவது,—சங்கரியம்மாள் வெய்யிலில் நடக்கமாட்டாது தள்ளாடித் தடியின் உதவியால் நடந்து, வீடு வீடாக ஏறி "அம்மா! தாயே! பிச்சை போடு தாயே!.... தள்ளாத ஜீவன் பசியாலெ துடிக்கிறது தாயே! தர்ம லக்ஷ்மீ! "நாராயண! நாராயண! நாராயண! நாராயண! ராமானுஜ! யதிவம்சாதிபதே! சம்போ! சிவசம்போ! சிவ சம்போ! கங்காதீசனே!....சம்போ சங்கரா! தேவா....சம்போ சரணம்"

என்று பாட்டும் பாடினுள். வீட்டுக்குள்ளிருந்து வந்த தேவதை "ஏ கெழுவி! ஒனக்கு வெக்கமில்லெ? தினம் ஒரே

வீட்டுக்கு வராதே; வாரத்துக்கு ஒரு நாளைக்கு வான்னு சொன்னேனே ஏன் இன்னிக்கு வந்தே?....ஒனக்கு புத்தி இல்லே? போடீ போ!"....என்று கூறிக் கதவைப் படாரென்று சாத்திக்கொண்டு போனாள்.

கண்ணில் நீர் தாரை தாரையாய்ப் பெருக சங்கரியம்மாள் பக்கத்து வீட்டுக்கு ஏறினாள். மகாதேவன் இந்த காட்சியைக் கண்டதுந்தான் தாங்கமாட்டாது அழுதுகொண்டே வீதியில் நின்றான். பக்கத்து வீட்டிற்கு ஏறி சங்கரி தன் பழய பல்லவியையே பாடிப் பிச்சை கேட்டாள்.

அச்சமயம் ஸூட்டும், ஹாட்டும், வாயில் சிகரேட்டுமாகக் கிளம்பி காலேஜிக்குப் போகும் ஜோரில் இரு வாலிபர்கள் வந்தார்கள். சங்கரியைக் கண்டதும் "இதென்னடா சனியன் பிடித்த முண்டை எதிரே வருகிறாள். ஏ கிழப்பிணமே! உனக்கு வேளை சமயம் இல்லே?....சனியன் பிடித்த பிச்சைக்கார நாய் களுக்கு வெட்கமே இல்லை. தரித்திரமே!....பிச்சையும் இல்லே. ஒன்னும் இல்லே.....போ!....போ.....போறயா? தள்ளட்டுமா?" என்று தாறுமாறுமாகக் கத்தினார்கள்.

அவர்களின் தாயார் ஒரு பெரியம்மா வெளியிலே வந்து, கையையும் முகத்தையும் ஆட்டி ஆட்டி "அடி பாவி முண்டே!.... குழந்தைகள் இரவு பகலா மண்டையை உடைத்துக்கொண்டு படித்துவிட்டு, இன்னிக்கு பரீக்ஷைக்குப் போறப்போ தரித்திர முண்டே நீ எதிரே வந்து நிக்கறயே....ஐயோ! பரீக்ஷை என்ன மாகுமோ....சீச்சீ!....வெளியே போடீ! சனியனெ பிடித்து தள்ளுங்கடா! நீங்க உள்ளே வந்து உட்காந்தூட்டு ஒரு வாய் தண்ணீர் குடிச்சுப்புட்டு, சாமியே வேண்டிண்டு போங்கடாப்பா! போடீ தரித்திரமே" என்று திட்டியபடியே கையை ஓங்கினாள்.

சங்கரியம்மாளின் இதயம் எப்படி இருக்கும்? ஒரு காலத்தில் தன் மகனையும் தான் படிக்க அனுப்பியதும், படித்துவிட்டு இப்போது திண்டாடும் திண்டாட்டமும் கண்முன்பு தெட்டெனத் தோன்றியது. விசனம் தாங்கமுடியாது, துடித்தவாறு திரும்புவதற்குள் மகாதேவனுக்குப் பொறுக்காமல் ஓட்டமாக ஓடி வந்தான்.

வீட்டுக்காரியை நோக்கி, "அம்மா! நீங்கள் கேவலம் இம்மாதிரி அனியாயமாகச் சொல்வது கடவுளுக்குப் பொறுக்காது. அம்மணீ! என் தாயார் பிறவியிலேயே இப்படிப் பிறந்துவிட்டவளில்லை. உங்களைப்போல் வாழ்ந்தவள்தான். உங்களைப்போல் என்னையும் பி. ஏ. வரையில் படிக்கவைத்த மகாராஜி. படித்த படிப்

பினல் நான் வாரிக்கொண்ட பலன் இதுதான். நீங்கள் அதிகமாக விரட்டிப் பேசவேண்டாம். உங்களுக்கு மேல் ஒருவன் உங்களை விரட்டக் காத்திருப்பதை மறக்காதீர்கள். அம்மா! வாம்மா!" என்று சங்கரியைக் கட்டியணைத்துப் பிடித்து நடத்தி வீட்டிற்கு வந்தான்.

வீட்டிலோ குழந்தைகள் பசி பசி என்று படுத்துப் புரளுகின்றன. அழுது அழுது களைத்துவிட்ட கன்ராவியைப் பார்த்துப் பின்னும் அவன் சங்கடம் அதிகரித்துவிட்டது. "ஐயோ! இத்தனை சங்கடங்களைப் பட்டுச் சாகவா நான் பிள்ளை பிறந்தேன்?.... இக்கஷ்டங்களை என்னால் கண்டு சகிக்க முடியவில்லையே! ஏ கடவுளே!....இனி நான் தற்கொலை செய்துகொண்டுச் சாக வேண்டியதுதான் பாக்கி.

ஆம்; ஆம்....இனிமேல் ஒரு நிமிடமும் என்னால் இக்கோராமையைப் பார்த்துப் பொறுக்க முடியாது. பாபி சதாயுஸ் என்பது போல் எத்தனை துன்பங்களையும் அனுபவிக்க உயிர் சித்தமாயிருக்கிறதே யன்றி போகும் வழியே இல்லை. தற்கொலைக்கு மிஞ்சிய மார்க்கம் இனி வேறு எதுவுமே இல்லை" என்று நினைத்துத் தம்பித்துப் போயிருக்கையில், ஜன்னலால் அவன் பார்வை வெளியில் சென்றது.

வீட்டுக்காரி காளிகா தேவியைப் போல் பெரிய கர்ஜனை செய்யும் தொனியுடன் "ஓகோ! யாரிடமடி இந்த திருட்டுத்தனத்தை யொளிக்கப் பார்க்கிறாய்? உன் சரித்திரத்தின் கொடுமையால், உன் எழவெடுத்த குழந்தைகளுக்கு சாப்பாட்டையும், பலகாரத்தையும், பக்ஷணத்தையும் திருடித் திருடிக்கொண்டு கொடுத்துவிட்டு என் வீட்டில் குழந்தைகளுக்கு மண்ணைப் போடுகிறாயா? நேற்று செய்த அத்தனை முறுக்கும் எப்படியடீ இதற்குள் தீர்ந்துவிடும்?" என்று அம்மியில் அறைத்துக்கொண்டிருந்த அனுசூயாவைக் கேட்டாள்.

இந்த வார்த்தைகள் மகாதேவனின் மனத்தில் நெருப்பையே அள்ளிக் கொட்டுவது போன்றிருந்தன. அங்கு பசியால் சுருண்டுவிட்ட தன் குழந்தைகளையும், தாயையும் பார்க்கிறான். வயிற்றில் கபீலென்று பற்றி எரிகிறது. "ஐயோ! பாழும் சாண் வயிற்றிற்காக அடிமை வேலைக்கு வந்து இந்த பட்டம் ஒன்றும் பெறும்படி விதியமைந்ததா!" வென்று கண்ணீர் பெருகியவாறு எழுந்தான்.

இதற்குள் அனுசூயா, "அம்மணீ! நான் தங்களுக்கு வேலைக்காரியாக விருந்தபோதிலும் தாங்கள் இம்மாதிரி அபாண்ட

மாகக் கூறும் செய்கைகளை என் காலில் ஒட்டிய தூசிகூடச் செய்யாது என்பது மட்டும் ஞாபகமிருக்கட்டும். ஐயோ! அதோ எட்டிப் பாருங்கள். என் குழந்தைகள் பசியினால் களைத்து விழுந்து கிடக்கின்றன. இனிமேல் இம்மாதிரி கூறவேண்டாம்" என்று சற்று ரோஷத்துடன் அழுத்தமான குரலில் கூறினாள்.

இதுகேட்ட அந்தம்மாள் "ஓகோ! நானுட அபாண்ட பழியைப் போடுகிறேன். உனக்குத் தெரிந்திருக்கும் இத்தனை சாகசத்தில் உன் குட்டிகளும் கற்றுப் பழகியவர்கள் தானே. அதனால்தான் பசி பசி என்று நாடகமாடுகிறார்களாக்கும்." என்று கூறி முடிக்குமுன் மகாதேவன் தடதடவென்று அங்கு சென்றான். "அம்மணீ! உங்களுக்கு அனந்தங்கோடி வந்தனங்கள். அனுசூயா! நாம் எங்கேயாவது பிச்சை எடுத்துப் பிழைப்போம்; இம்மாதிரி பழிச்சொல் வாங்கி உழைத்துப் பிழைக்க வேண்டாம். கிளம்பு. இன்று பலகாரத்திற்கு வந்த பட்டம் நாளைக்கு பெரிய விஷயத்திற்கும் கட்டாயம் வரும். பிழைக்க வழி இல்லையெனில் பட்டினியால் ஒரு குழந்தை செத்ததுபோல் எல்லோரும் சாவோம். இனி இந்த வேலை வேண்டாம். அம்மணீ! இதோடு போதும். நாங்கள் சீக்கிரத்திலேயே வீட்டை விட்டுப் போய் விடுகிறோம்" என்று கூறிக்கொண்டே அனுசூயாவின் கைகளைப் பிடித்து அழைத்து வந்து விட்டு விட்டு, அங்கு நிற்கச் சகியாது வெளியில் போய்விட்டான்.

அவன் மனது அலையும் அலைச்சலை அவனால் சகிக்கவே முடியவில்லை. இனி இவ்வுலகத்தில் இருக்க அவன் மனம் முற்றிலும் வெறுத்தது. "சீச்சீ! பாழும் பிறவி, பாழும் உலகம், பாழும் வாழ்க்கை, பாழும் வயிறு, பாழும் பணத்திமிர், பாழும் விதி.... எல்லாம் பாழானதே யாகும். ஈன்ற தாய் பிச்சை எடுக்கவும், பெற்ற குழந்தைகள் பட்டினியில் சாகவும், இதய பூர்வமாய்க் காதலித்த கண்மணி அடிமை வேலையில் அடாப்பழி கேட்டு வருந்தவும் இப்பாதகன் பார்த்துக்கொண்டிருப்பதா? சகித்துக் கொண்டிருப்பதா?

முடியாது; முடியாது. இனிமேல் அரைக்கணமும் உயிர் வாழ முடியாது. "பெற்ற தாய்க்கு ஒரு வாய் கஞ்சி வார்க்கக் கையாலாகாத மகன்" என்று என் தாயின் குடல் நினைத்துச் சபிக்குமல்லவா? "பெற்ற அப்பனும்!....உயிர் துடிக்கையில் ஒரு வாய் கூழ் வார்க்காத அப்பன் இருந்தாலென்ன, இறந்தால் என்ன?" என்று குழந்தைகளின் இதயத்தில் தோன்றுமல்லவா?

"காதலியாம், காதலி! காதலியின் கவலையைப் போக்கும் ஒரு குவளை நல்ல சுத்த ஜலமும் கொடுத்துக் காக்க முடியாத

காதலனுக்குக் காதலி எதற்கு?" என்று என்னருமைக் கண்மணி அனுசூயாவின் உள்ளம் நினைக்குமல்லவா? ஆம்....ஒன்றிற்கும் உபயோகமில்லாத இந்த ஜன்மம் இனி எதற்கு? இந்த நிமிடமே இக்கிணற்றில் விழுந்து என் பாழ்ப் பிறவியின் அவகேட்டைப் போக்கி விடுகிறேன்....ஆம்....தாமதிக்கக்கூடாது. தாமதித்தால் மனமாகிய குரங்கு மாயையில் மாறி விடும். நினைத்ததும் முடித்து விடவேண்டும்" என்று மனத்தை திடப்படுத்திக்கொண்டு அதே வைராக்யத்துடன் அங்குள்ள பாழுங் கிணற்றுக்கு ஓடினான்.

கிணற்றை உற்றுக்கவனித்தான். அது பாழுங்கிணறுகையால், பூச்சியும் புழுவும் நெளிந்து, துர்க்கந்த வாடையும் நாசியைத் துளைத்தது. ஆனால் அவனுடைய மனத்தின் வேகத்திற்கு முன்பு எதுதான் நிற்கும்? தண்ணீரை உற்றுக் கவனித்தான். "கடவுளே!....உலகத்தில் ஒரு மனித ஜன்மத்தை சதா துக்க சாகரத்தில் கழிக்கும் பொருட்டே பிறப்பித்தாய். இந்தா! இதை நீயே எடுத்துக் கொண்டு, இனியாவது என் குடும்பத்திற்குப் பிழைக்க வழி காட்டு." என்று கூறும்போது, அக் கிணற்று ஜலத்தில் அவன் தாய், மக்கள், மனைவி ஆகியோரின் அழகிய முகங்கள் கண்ணீர் நிறைந்து பரிதாபத்துடன் தெரிந்ததும், மகாதேவன் அலறித் திடுக்கிட்டுக் கதி கலங்கினான்.

"ஏ மூடனே! மதி சூனியனே! மரத்தைக் கொடிகள் அணைந்து நிற்பதுபோல் உன்னைச் சுற்றிக்கொண்டு கொடிகள் போலிருக்கும் உன் குடும்பம், நீ தற்கொலை செய்துகொண்டு மாண்டதும் அடியோடு சிதறி விடுமே!....உன்னுடைய பாதுகாப்பும் இல்லை என்றால், உன் மனைவியின் விலையிலாத கற்பை துஷ்ட புத்தியுள்ள அரக்கர்கள் பலி கொள்வார்களே....அட முட்டாளே!" என்று அக்கிணறே இவனை இடித்துக் கூறுவது போல் ஒரு தோற்றம் தோன்றியது.

முன்பிருந்த வைராக்யம் சிறிது தலை சாயத் தொடங்கியது. "ஆம்....ஆம்....நான் மட்டும் கஷ்டத்தை யனுபவிக்கமாட்டாது தற்கொலையாவது செய்துகொண்டு நிம்மதியடையப் பார்ப்பது சற்றும் சரியல்ல. அது பிசகு....முற்றிலும் பிசகு....என்....இம்மாதிரி செய்தால் என்ன?....நான் செத்த பிறகும், அவர்களைச் சந்தியில் அலைய விட்டு வசை வாங்குவதை விடக் கூண்டோடு கைலாசம் போய் விட்டால் வெகு உத்தமமாயிற்றே!........

அவர்கள் மட்டும் என் கவலைக் கடலில் விழுந்து தத்தளிக்க வேண்டும்? வேண்டாம்........அவர்களுக்கும் இனி கவலை வேண்டாம்........மானங்கெட்டு வாழுவது ஒன்றுதான் இனி

மிச்சம்; அவ்வாழ்க்கை வாழவேண்டாம்....எல்லோரும் கூண்டோடு கைலாசம் போய்விடுவோம்......பெற்ற தாயும், பிள்ளை குட்டிகளும், மனைவியும் என்னொருவன் முடிவால் அடையும் நஷ்டத்தைவிட கூண்டோடு கைலாசத்தினால் பெரிய பலனே அடைவார்கள்....

ஆமாம்....இனி இதுதான் முடிவு....இப்பாழும் உலக வாழ்க்கை போதும்....இது பரியந்தம் கண்ட பலன்களே போதும். இனி வேண்டாம்....இதுதான் வழி" என்று வைராக்யத்துடன் ஓர் முடிவுக்கு வந்தான். பித்தன்போல் கடைத் தெருவிற்கு ஓடினான். கையிலிருந்த அன்றைய கூலியில் ஒரு படி அரிசி, பருப்பு, புளி முதலியன வாங்கினான். உண்டால் உடனே மாளக் கூடிய விஷம் எது என்பதை ஏற்கெனவே தெரிந்து வைத்திருந்தால் அதையும் வாங்கிக் கொண்டான்.

அவன் ஏதோ பெரிய கொலையைச் செய்யப் போவதாக அவன் மனத்தில் தோன்றவில்லை. பெரும் புனித காரியத்தை ஆரம்பிக்கப் போவதாயும், அதில் முதலிலேயே ஜெயங்கிடைத்து விட்டதாயும் ஒரு வித தெம்பும், முக மலர்ச்சியும், சந்தோஷமும் உண்டாகியது. அடுத்த க்ஷணமே...."ஆ!....என்னருமைத் தாய், என்னுருயிர்க் காதலி, என்னுயிரினும் இனிய குழந்தைகள்!.... இவைகளை அடைய உலகம் எத்தனை தவம் செய்கிறது?.... இப்பாவி அடைந்தும், தானே தன் கையினாலேயே கொல்லப் போகிறானே.

சீச்சி!....அஞ்ஞானமே! மூடாதே; விட்டு விடு. இப் பாழும் உலக வாழ்க்கையின் அனுபவம் போதும். இந்த மோச உலகத்தை விட்டு விரைவில் வெளிக் கிளம்பு" என்று தன்னையே தான் தேற்றிக் கொண்டான்.

அப்போது பகல் பன்னிரண்டு மணிக்கு மேலாகிவிட்டது. வீட்டிற்கு வந்தான். ஒவ்வொருவரும் ஒவ்வொரு மூலையில் சுருண்டு கிடந்தார்கள். அனுசூயா மட்டும் தன் கந்தலான ஈர உடையுடன் லக்ஷ்மீ படத்தின் முன்பு மண்டியிட்டு வணங்கி ப்ரார்த்தனை செய்து, பூஜை செய்து கொண்டிருந்தாள். அதைக் காணும்போது தினம் சந்தோஷம் பொங்கும் மகாதேவனுக்கு, அன்று எரிச்சலும் ஆத்திரமும் உண்டாகி வெறுப்பை யளித்தது.

"அனுசூயா! போதும் தினம் தினம் கடவுளை பஜித்துப் பஜித்து நாம் கண்ட பலன்! பூஜையுமாச்சு; சேவையுமாச்சு. கால் வயிறு கஞ்சிக்கும் பஞ்சையாக்குகிறார்களே அதுதான் அடைந்த பலன்....எழுந்து வா. எனக்கு பசி உசிர் போகிறது. இதோ சாமான். சீக்கிரம் பருப்புக் குழம்பும், சாதமும் செய்....

குழந்தைகளை அப்புறம் எழுப்பலாம்; அடுப்பை மூட்டு." என்று அதட்டிய குரலில் கூறியவாறு சாமான்களை வைத்தான்.

அனுசூயா வெகு விசனத்துடன் எழுந்து "அத்தான்! நாம் செய்த கருமத்தை நாம் அனுபவிக்கிறோம். அதற்குக் கடவுள்மீது ஏன் இன்னும் குறை கூறவேண்டும்? இதோ ஒரு நொடியில் செய்கிறேன்....ஸ்நானம் செய்துவிட்டு வாருங்கள்." என்று கூறியபடியே அடுப்பு மூட்டி உலையை வைத்தாள். குழம்பிப் போய் தத்தளித்த மனத்துடன் உட்கார்ந்திருந்த மகாதேவனுக்கு இருக்கையே கொள்ளவில்லை. சுருண்டு படுத்துக்கிடக்கும் குழந்தைகளின் முகத்தையும், தாயாரின் முகத்தையும் பார்க்கிறான். தாமரையிலை நீர்த்துளிபோல் தத்தளிக்கிறான்.

"சீச்சீ! இந்த உலகத் தன்மையையே அறியாத இக் குழந்தைகள் எப்படியாவது பிச்சை எடுத்தாவது பிழைத்துப் போகட்டும். அவர்களையேன் கொல்ல வேண்டும்?........ஹா!.... அது மகா பயங்கரம். என் ஒருவனின் தற்கொலை என் தாயையும் மனைவியையும்கூட வலித்துக் கொள்ளும்....பிறகு இப்பரதேசிகள் இவ்வஞ்சனை உலகத்தில் கேவலம் புழுவைப்போலல்லவா பரிதபிக்க வேண்டும்?

மாட்டேன்....அவ்விதம் அலைய விடமாட்டேன். போகட்டும். அவர்களும் நிம்மதி உலகத்திற்குப் போகட்டும். இதுதான் தீர்மானம். இனி மாற்ற முடியாது.....அனுசூயா! ஆய்விட்டதா?" என்றான். குழந்தைகள் புரண்டவாறு "ஐயோ!....பசி....அம்மா! கொஞ்சம் தண்ணியானு கொடேன்." என்றார்கள்.

அனுசூயா ஓடி வந்து அவர்களை எழுப்பி, ஒவ்வொருவராய் தடவிக் கொடுத்து "கண்மணிகளே! இதோ பாருங்க அடுப்பில் சமையலாகிறது. நீங்கள் எழுந்து கை கால்களைக் கழுவிக்கொண்டு சுத்தமாக வாருங்கள். சாதம் போடுகிறேன். எழுந்திருங்கள்" என்றாள். அந்தோ! பசியின் பாதை அனுபவித்தவர்களுக் கல்லவா தெரியும்?

குழந்தைகள் "ஆ....சாதமாம்மா?....எங்கேம்மா?" என்று ஓர் புதிய உணர்ச்சியுடன் எழுந்து, அடுப்பின் பக்கம் பார்க்கும் போது சாதம் கொதித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அதைப் பார்த்ததும் குழந்தைகளுக்குண்டான சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. அவர்கள் கும்மாளித்துக் குதிக்கும் சக்தி அந்த கொதிக்கும் சாதத்தைப் பார்த்ததுமே உண்டாகிவிட்டது.

இதை தூரவிருந்து பார்க்கும் மகாதேவனின் மனம் பற்றி எரிந்து விம்முகிறது. சங்கடம் சகிக்க முடியவில்லை. "ஐயோ!

இன்னும் ஐந்து நிமிடத்தில் இவ்வுலகையே விட்டு உங்களை மாய்க்கப்போகும் சாதமே உங்களுக்குப் பெருத்த சந்தோஷத்தைக் கொடுக்கிறதே....ஹா....என்ன செய்வேன் ?"....என்று கதி கலங்குகிருன். குழந்தைகள் ஓட்டமாக ஓடி கை கால்களையும், முகத்தையும் சுத்தமாகக் கழுவிக் கொண்டு உட்கார்ந்து விட்டார்கள். அனுசூயா சங்கரியையும் அன்போடு எழுப்பி உபசரித்து உட்கார வைத்தாள்.

சங்கரியை அழைக்க அனுசூயா வந்த சமயம், மகாதேவன் அடுப்பின் பக்கம் சென்று அடுப்பில் கொதிக்கும் குழம்பில் கை நடுங்க, மனம் பதைக்க, கண்ணில் நீர் பெருக விஷத்தைப் போட்டு விட்டான். அனுசூயா சங்கரியை எழுப்பி உட்கார வைத்துவிட்டு வந்து, சாதத்தையும் குழம்பையும் ச்வாமிக்கு முன் வைத்து நிவேத்தியம் செய்த பிறகு பரிமாறக் கிளம்பினுள்.

மகா :—அனுசூயா ! தினம் நமக்குச் சாப்பாடு அகப்படுவதே அரிதாக விருக்கிறது. ஒரு நாள் அகப்பட்டாலும் நீ கூட உட்கார மாட்டானென்கிருய். இதோ பாரு. இன்று நாம் எல்லோரும் ஒன்ருகத்தான் சாப்பிட வேண்டும் என்று எனக்கு ஆசையா யிருக்கிறது. நீயும் உட்காரு. தடுத்துக் கூருதே"—என்று வெகு அன்பாகக் கூறுகிருனே யன்றி, அவன் வயிற்றில் செய்யும் சங்கடத்தைக் கூறத் திறமே இல்லை.

அனு :—நான் உங்களுடன் சாப்பிட இஷ்டமில்லாதவளா என்ன ? அதற்கு நான் பாக்யம் செய்யவில்லை. குழந்தைகளுக்கும் மாமிக்கும் போட்டு மிஞ்சினுல் அதைச் சாப்பிடுவதற்காக நான் கடைசியில் உட்காருகிறேன். கூட உட்கார்ந்து போதாவிட்டால் என்ன செய்வது ? அத்தான் !....இன்று அரிசி நிறைய போட்டிருக்கிறேன். உங்களிஷ்டப்படியே உட்காருகிறேன்.—என்று மற்ருெரு கலத்தையும் எடுத்து வைத்தாள்.

குழந்தைகள். "அம்மா ! எத்தனை நாழிம்மா ! சீக்கிரம் போடும்மா ! எத்தனை நாழி ச்வாமிக்கு பண்ணுவே ? எங்களாட்டம் ச்வாமிக்கு பசியா எடுக்கறது ? அவருக்கு தான் ஊர்லே இருக்கற எல்லாரும் சாதம் போடுவான்னு நீ சொல்லி இருக்கயே..... அப்படி எல்லாராத்திலேயும் சாட்டுண்டே இருந்தா பசி ஏதும்மா ? எங்களுக்குப் போடும்மா" என்று கூறும்போது அனுசூயாவின் உள்ளம் உருகியது. மகாதேவனின் உள்ளம் வெந்து வெதும்பியது.

"ஹா ! இம்மாதிரி செய்வது பாபமல்லவா ?" என்று நினைக்கும்போது தேகம் நடுங்குகிறது. அடுத்த க்ஷணம் "பாபமாம் பாபம் !....பாவத்தைப் பாரு. இந்த உலகத்தில் பரிதவிக்க

விட்டுச் செல்லும் பாவத்தை விட இது பாவமே இல்லை. என் அந்தக் கடவுள் கஞ்சியும் கொடுக்காது சோதிக்கிறார்? அதனால் இந்த பாவத்தையும் நன்றாய் ஏற்று என்னை தண்டிக்கட்டும்.... மயங்காதே மனமே!....தியங்காதே....தைரியமாயிரு."

என்றெல்லாம் எண்ணியபடியே இலையில் உட்கார்ந்தான். சாதம் பரிமாறப்படும்போது அவன் வயிற்றில் பகீர் பகீர் என்று பொறுக்க முடியாத வேதனை செய்கிறது. அடுத்த நிமிடத்தில் ஆகப்போகும் கதியை நினைக்க சரீரமே தீயினால் பொசுங்குவது போல் எரிகிறது.

இலையில் சாதத்தைப் பார்த்ததும் குழந்தைகளின் குதூகலம் கூற முடியாது. ஒவ்வொன்றும் முகத்தைப் பார்த்துச் சிரிக்கிறதும் கூச்சலிடுவதுமா யிருக்கிறது. குழம்பில் அனுசூயா கையை வைக்கும்போது மகாதேவனின் இதயத்தில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவது போலிருக்கிறது. "ஆ!....அதில் விஷம்....விஷமிருக்கிறது" என்று சொல்லிவிடலாமாவென்று திடீரென்ற ஒரு தோற்றம்....அடுத்த வினாடி மவுனம்.

---

## 19-வது அதிகாரம்

### மண்டல பூஜையும், அதிர்ஷ்ட மழையும்

அனுசூயா குழம்பைப் பரிமாற எடுத்துக்கொண்டு வந்து முதலில் குழந்தைகளின் முன்பு குனிந்தாள். அச்சமயம் இவர்களின் உள் கதவை யாரோ பலமாகத் தட்டும் சத்தங் கேட்டதும் அனுசூயா சற்று தயங்கினாள். பின்னும் இடிப்பதுடன் "அனுசூயா தேவி! அனுசூயா தேவி!" என்று தன் பெயரை வெகு மரியாதையுடன் அழைக்கும் அதிசயத்தைக் கேட்டு வியப்புற்று, குழம்பை அப்படியே வைத்து விட்டுக் கதவின் பக்கம் வந்தாள்.

யாரோ கூப்பிடும் குரல் கேட்டதால், அதை எதிர்பார்க்கும் வேகத்தில் குழந்தைகளின் மனம் லயித்து ஒன்றிரண்டு தாயுடன் நகர்ந்தன. அனுசூயாவின் பயம் முற்றும் மைனரின் சூழ்ச்சியிலேயே லயித்திருந்ததால், அவனைச் சேர்ந்த யாரேனும் வந்து விட்டார்களோவென்று தியங்கினாள். இதற்குள் பெரிய குழந்தை

கதவின் இடுக்கால் எட்டிப் பார்த்து "அம்மா! அம்மா!....அப்பா! அப்பா! ஓடி வாயேன். யாரோ நாலு பேர் தட்டு தட்டா பழம், ஏதேதோ, என்னென்னமோ கொண்டுவந்திருக்கா" என்று கத்திய வாறு மகாதேவனின் கையைப் பிடித்து இழுத்தது.

இதற்குள் அனுசூயா கதவைத் திறந்ததும் அவள் தன் கண்களை நம்பவே இல்லை. சுமார் 10, 15 தட்டுகள் கல்யாண வரிசை போல் எடுத்துக்கொண்டு ஒரு கிழவியும், இடுப்பில் குழந்தையுடன் ஒரு யுவதியும் உள்ளே வந்து குழந்தையைக் கீழே விட்டு விட்டு "அம்மணி! நமஸ்காரம்....எங்களைத் தெரிகிறதா? நீங்கள் உயிர்ப் பிச்சை கொடுத்துக் காப்பாத்திய பையன் இவன்...." கீழே வரிசைகளை வையுங்கள்" என்று வேலைக்காரர் களுக்குச் சொன்னார்கள். அவர்களும் அச்சிறிய இடம் பிடிக்காமல் தட்டுகளை வைத்துச் சென்றார்கள்.

அனுசூயாவுக்கு ஒன்றுமே தோன்றாமல் திக்ப்ரமை பிடித்து விட்டது போலாகிவிட்டது....."ஆகா! அத்தான்! இவர்களைத் தெரிகிறதா? முன்னொரு காலத்தில் அந்தப் பாழும் மைனர், வண்டியை ஒரு கர்ப்பிணியின் மேல் ஏத்திவிட்டுச் சென்றானே, நாம் தூக்கி வந்து ஆஸ்பத்திரியில் விட்டு வந்தமே அவர்கள் தான் இவர்கள்...அம்மா சவுக்கியமா? ஆயா சவுக்யமா?....அன்று பிறந்த குழந்தையா இவன்!....என்ன ஆச்சரியம்!....இதென்ன வரிசை....எனக்கு ஒன்றுமே தெரியவில்லையே....உன் பேர் சாரதாம்பாள் இல்லையா? ஒக்காருங்கள்" என்று உபசரித்தாள்.

சாரதா:—தாயே! இதெல்லாம் உங்களுக்குத்தான். இதோ இந்தாருங்கள்—என்று ஒரு செக்கை நீட்டினாள். அதை அனுசூயா வாங்கிப் பார்த்ததும் ஹா....வென்று ப்ரமித்து அலறினாள். லக்ஷ ரூபாயிக்குத் தன் பெயரில் குறிப்பிட்டிருந்தது கண்டு "இது ஏது?....இதை ஏன் என்னிடம் கொடுத்தீங்க?" என்றாள்.

இந்த சமயத்தில் மகாதேவன் மெல்ல சந்தடி செய்யாமல் உள்ளே சென்று சட்டியுடன் குழம்பை எடுத்துக்கொண்டு புறக் கடைப் பக்கம் போய் ஒரு பள்ளத்தைத் தோண்டி, சட்டியோடு அதில் கொட்டி மண்ணை மூடிவிட்டுக் கையை கழுவிக்கொண்டு "ஹா....கடவுளே! உன் சோதனையின் வேடிக்கையை என்னென் பேன்?" என்று உள்ளம் பூரித்தவாறு ஓடி வந்தான்.

இதற்குள் சாரதாவின் தாயார் தட்டில் கொண்டு வந்துள்ள பழங்கள், பலகாரங்கள் எல்லாவற்றையும் குழந்தைகளுக்கும், சங்கரியம்மாளுக்கும் எடுத்துக் கொடுத்தாள். குழந்தைகளின் சந்தோஷத்திற்குக் கேட்கவேண்டுமா! ஆவலுடன் சாப்பிடத் தொடங்கினார்கள்.

சாரதா :—அம்மணீ! பழத்தைச் சாப்பிடுங்க! நீங்க முதல்லே உட்காருங்க. தாயே! இந்த லக்ஷ ரூபாயும் உங்களுடையது தான்— என்ற வார்த்தையைக் கேட்டதும் மகாதேவனுக்கும், அனுசூயா வுக்கும் தூக்கி வாரிப்போட்டது. "என்ன! என்ன! லக்ஷ ரூபா எங்களுடையதா! இதென்ன வேடிக்கை! எங்களுக்கொன்றும் விளங்கவில்லையே?" என்றார்கள்.

சாரதா :—தாயே! அன்று நீங்களிருவரும் எங்களைக் காப்பாற்றி யிராவிட்டால் எங்கள் கதி அதோகதியாகி இருக்கு மல்லவா! அம்மணீ! உங்கள் தர்மம் உங்களைத் தலை காத்தது. நான் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு வந்த பிறகு எப்படியாவது உங்களை வந்து பார்க்கவேண்டுமென்று நினைத்தேன். பல தொல்லை களால் முடியவில்லை. இடமும் தெரியாது, இடையிலே இத்தனை வருஷங்கள் ஓடிப்போய் விட்டன. எப்படியோ கஷ்டப்பட்டோம்.

என் புருஷனுக்கு ஒரு அச்சாபீஸிலே 15 ரூபா சம்பளத்லே வேலை ஒன்று கிடைத்தது. அதன் சொந்தக்காரர் என் புருஷனுக்கு பொங்கல் ஏனும் பத்து ரூபா கொடுத்தாராம். அதை எடுத்துக் கொண்டு என் புருஷன் வீட்டுக்கு வந்தபோது ஒரு சினேகிதன் ஒரு புத்தகத்துடன் வந்து "இதோ பாரு. சந்திரமண்டலம் லாட்டரி புத்தகம் கொண்டு வந்திருக்கிறேன். ஒரு சீட்டு ரெண்டு ரூபாய். அதிர்ஷ்டம் உண்டானு முதல் பரிசு ஒரு லக்ஷமும் வரலாம்; இல்லையானு கடைசீ பரிசு 5 ரூபாயாவது வரலாம். அதுவும் அதிர்ஷ்டமில்லேன்னு ஒன்னுமே இல்லாமையும் போவலாம். இதெல்லாம் அவரவர் அதிர்ஷ்டம்போல் மழை பெய்யும். நீ ஒரு சீட்டாவது வாங்கேன்" என்று தூபம் போட்டான்.

எனக்கு இதிலெல்லாம் கொஞ்சம் ஆசை உண்டு. "இன்னிக்கு இனுமா வந்த பத்து ரூபாயெயும் 5 சீட்டு வாங்கி 5 பேர் மேலே எழுதி கட்டிவிடுவது, யார் யாருக்கு அதிர்ஷ்டமோ பார்ப்போம்" என்று நானும், என் புருஷனும் முடிவு கட்டிக்கொண்டு 5 டிக்கட்டு எடுத்தோம். ஒன்னு எம் பேருக்கு, ஒன்னு கெழவி பேருக்கு, ஒன்னு என் புருஷன் பேருக்கு, ஒன்னு என் குழந்தை பேருக்கு, மிச்சம் ஒன்னே ஒங்க பேருக்கு எழுதி ஒங்களுக்காக நாங்களே கார்டினுக கையொப்பமிட்டு அனுப்பிவிட்டோம்.

ஒங்க ஞாபகத்தை மறக்கவே முடியவில்லை. சதா நினைத்துக் கொண்டுதான் கஞ்சி குடித்து வந்தோம். 5 சீட்டு கட்டினதும் அதிர்ஷ்ட மழை யாருக்குப் பெய்தது பாருங்கள். எங்க பையன் பேருக்கு போட்டதில் மட்டும் 500 ரூபாய் ஒரு பரிசும், உங்கள் பேருக்கு முதல் பரிசும் விழுந்ததாகத் தந்தி வந்துவிட்டது.

எங்களுக்கு அதிர்ஷ்டமில்லே என்று தெரிந்துவிட்டது பாருங்கள். இந்த தந்தி வந்ததும் ஆசை யாரை விட்டது? "நீ தானே பணத்தைக் கட்டினே! ஏன் நீயே எடுத்துக்கொள்ளக் கூடாது? இதை ஏன் அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்?" என்ற ஒரு கெட்ட எண்ணம் தோன்ருமலில்லே; தோன்றியது. நாங்கள் அதைப்பற்றி யோசித்து நாங்களே எடுத்துக்கொள்வ தென்று முடிவு கட்டிவிட்டோம்.

இது தெய்வத்திற்குப் பொறுக்குமா! நீங்க அந்த ஆபத்துக் காலத்திலே 5 ரூபாய் கொடுத்துக் காப்பாத்திய பணத்தை நாங்க திருப்பிக் கொடுக்காத வரையில் உங்களுக்கு நான் 5 ரூபாய் என்றும் கடன்பட்டவ தானே.

அம்மா! நீங்க நம்பினுல் நம்புங்கள்; இல்லாவிட்டால் போங்கள். அந்த மாதிரி முடிவுக்கு வந்ததும், இந்த பையனுக்கு இருந்தாற்போல் திடீரென்று வலிப்பு வந்து இழுக்கவாரம் பித்தது. உடனே எனக்குப் பயம் பிடித்துக்கொண்டது. "உனக்கு உபகாரம் செய்து ஆபத்தில் காத்தவர்களுக்கு வஞ்சனே எண்ணு கிருயா! அதனுல் தான் உன் மகனுக்கு ஆபத்து வந்துவிட்டது. உனக்கு அதிர்ஷ்டமிருக்குமாயின், உன் பெயருக்கு ஏன் விழாது? நீ தருமத்திற்கு மரியாதை கொடு" என்று என் மனமே என்னேக் குத்தியது.

உடனே நான் ச்வாமி முன்பு சென்று கன்னத்திலறைந்து கொண்டு, அப்படியே செய்வதாக வேண்டி சத்தியமும் செய்து விட்டேன். மறு தினமே குழந்தைக்குத் தெளிந்தது. உங்கள் இருப்பிடம் தெரியாமல் நாங்கள் அலேந்து திரிந்துவிட்டோம். பத்திரிகைக்காரர்களும், புகைப்படக்காரர்களும் எங்கள் வீட்டில் நிரம்பிவிட்டார்கள். நான் "இந்த முதல் பரிசு வந்தது எனக்கல்ல; என் சகோதரிக்கு. அவளுக்காக நான் கட்டினேன். அவளே உங்களுக்குக் காட்டுகிறேன்" என்று கூறினேன். அவர்களும் வீதியில் இருக்கிருர்கள்.

தாயே! இதை எல்லாம் நீங்கள் அங்கீகரிக்கவேண்டும். இதை மறுக்கக்கூடாது" என்று கூறியதைக் கேட்டதும், ஏதோ கதை சொல்வதுபோல் அனுசூயாவுக்குத் தோன்றியதே யன்றி அவள் மனம் விவரிக்க இயலாத விதம் குழம்புகிறது. "சாரதா! இதென்ன வேடிக்கை! உன் பணத்தை நீ செலவிட்டு, உனக்குக் கிடைத்த இப்பரிசுக்கு நானு குறுக்கே வருவது? இல்லே....சாரதா! இது உனக்குத்தான் சொந்தம். நீதான் இதை அடையவேண்டும்" என்று வற்புறுத்தினுள். சங்கரியின் ஆச்சரியத்திற்கு எல்லேயே இல்லே. மகாதேவனும் இதையே கூறினுன்.

சாரதா :—அதெல்லாம் முடியவே முடியாது. இதை நான் எடுத்துக்கொண்டால் என் குடும்பமே அழிந்து விடும். நான் இதைத் தொடவே மாட்டேன். என்னை ஆபத்தில் காப்பாற்றிய தற்காகக் கடவுள் உங்களுக்கு இந்த அதிர்ஷ்ட மழையை எங்கள் மூலமாக பெய்யச் செய்தார். நாங்கள் தொடவே மாட்டோம்— என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டாள்.

அடுத்த வீட்டுக்காரி இந்த வைபவத்தை எல்லாம் ஜன்னல் வழியாகப் பார்த்து வயிறெரிந்து பெருமூச்சு விடுகிறாள். அனுசூயா சாரதாவை நோக்கி, "சாரதா! நீ சொல்வதை அப்படியே ஏற்றுக்கொள்ள என் மனம் இடங்கொடுக்கவில்லை. நான் வறுமை யால் கஞ்சிக்குக் கஷ்டப்பட்டு வந்தாலும் நியாயத்திற்கு மீறி நடக்கமாட்டேன். இரண்டு மாதத்திற்கு முன்பு ஒரு பெரியவரைக் கோயிலில் சந்தித்தேன். அவர் "நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே. இந்த அம்பிகையின் பாதங்களை நம்பி இரு. ஒரு அமாவாசையில் —நிறைந்த நாளில்—வீட்டில் லக்ஷ்மி படத்திற்குப் பூஜை செய்ய ஆரம்பித்து, விடாமல் ஒரு மண்டலம் தினம் பூஜை செய்து வா. உன் கையில் ஒன்றும் அகப்படவில்லை என்றால் சுத்த ஜலத்தை நிவேத்யம் செய்து வா; மறு அமாவாசை முடிந்து பத்து தினங் களுக்கு ஒரு மண்டலம் முடியும். அதாவது 40 நாள் முடிந்து விடும். அப்போது நல்ல வளர்பிறை காலமாக விருக்கும். அப் போது உன் வறுமை நீங்கி, பெருமையடையும் மார்க்கத்தை வளர் பிறை மதிபோல் வளரும்படி அம்பாள் அருள் செய்வாள்; ஆகையால் தியங்காதே" என்று கூறினர்.

நான் அதை சில நாள் வரையில் நம்பாது பேசாமலிருந்து விட்டேன். ஆனாலும் மனம் பின்னும் தூண்டியதால் "தினம் லக்ஷ்மி பூஜை செய்வதில் என்ன குற்றம்? நாம் செய்த பாவ மாவது போகட்டும்" என்று எண்ணி அமாவாசையன்றே ஆரம்பித்து ப்ரதி தினமும் செய்து வருகிறேன். நான் அதன் பலனை எதிர்பார்க்கவே இல்லை. இன்றுதான் சரியாக ஒரு மண்டலம் பூர்த்தியாகும் 40-வது நாள்; மண்டல பூஜை நாள்.

இன்று என் மனம் வெறுத்ததுபோல் என்றும் வெறுத்த தில்லை. படாப்பழி கேட்க வைத்ததே என்றும் தோன்றியது. இதுபரியந்தம் இத்தனை கஷ்டங்களையும் அனுபவித்துச் சகித்து வந்த என் மனமே இன்று தற்கொலைக்கும் துணிந்தது. இன்றும் குழந்தைகளுக்கு ஆகாரம் கிடைக்காவிட்டால், நல்லதங்காளைப் போல் குழந்தைகளையும் கிணற்றில் போட்டுவிட்டு, நானும் சாகத் தீர்மானித்துவிட்டேன். அந்தோ! என்ன சோதனை? என்ன விசித்திரமான மாறுதலையும், சம்பவத்தையும் அந்த லக்ஷ்மி காட்டி

விட்டாள்! அந்த பெரியாரின் வாக்கு சொல்லியதற்கும், நீ இப்போது வந்ததற்கும் ஒத்திட்டுப் பார்த்தால் ஆச்சரியமா யிருக்கிறது. சாரதா! இந்த அதிர்ஷ்ட மழை உண்மையில் எனக்குப் பெய்ததாயின் அதைக் கடவுளே நிரூபிக்கட்டும்.

அதாவது,—அதிர்ஷ்ட சீட்டு ஒன்று எழுதுவோம். நீங்கள் போட்ட படியே 5 பேர்களையும் எழுதி அதே லக்ஷ்மி படத்திற்கு முன்பு வைத்து விட்டு, தெருவில் போகும் ஒருவரை எடுக்கச் சொல்வோம். அதில் யார் பெயரிருக்கிறதோ, அதுதான் கடவுளின் தீர்ப்பு. என்ன சொல்கிறாய்?" என்றாள். இந்த யோசனையை எல்லோரும் ஆமோதித்ததால், அப்படியே எழுதிப் போட்டுவிட்டு வீதியில் சென்று பார்த்தாள்.

அப்போதுதான் சிறு பையன் ஒருவன் பள்ளிக்கூடத்திற்குச் செல்வதைக் கண்டு, அவனை யழைத்து எடுக்கச் செய்தாள். அதைப் பிரித்துப் பார்த்த உடனே "அனுசூயா" என்ற சீட்டே வந்ததும் ஆச்சரிமும், ஆநந்தமும் கரை கடந்து விட்டன. அந்த பையனுக்கு நிறைய பழங்கள் கொடுத்து அனுப்பினாள். பையன் சந்தோஷமாகச் சென்றான்.

அடடாடா! அதிர்ஷ்டம் வருவதும், போவதும் யாருக்குத் தான் தெரியும்? ஆறிடு மேடு மடுவு போலாம் செல்வம். அனுசூயா வுக்குப் பெய்த அதிர்ஷ்ட மழைக்குக் காரணம் அவள் செய்த மண்டல பூஜையா! அல்லது உத்தம குணமா! முன் செய்த ஜென்மாந்திர சுகிர்தமா! எதுவானாலென்ன? கஷ்டம் விடியும் காலம் வந்து விட்டது. ஆனால், அடுத்த வீட்டுக்காரியோ லபோ திபோ வென்று வயிற்றில் குத்திக்கொண்டு உள்ளே ஓடினாள்.

அனுசூயா அந்த செக்கை அப்படியே அந்த லக்ஷ்மி படத்தின் பாதத்தில் வைத்து புஷ்பத்தால் அர்ச்சித்தாள். ஆநந்தக் கண்ணீர் பெருகுகிறது. மகாதேவன் தான் சற்று முன் செய்ய விருந்த படுகொலையிலிருந்து அனுசூயாவின் மண்டல பூஜைதான் தன்னைக் காப்பாற்றியது என்று எண்ணி அப்போதுதான் அந்த விஷயத்தை தன் தாயிடமும், மனைவியிடமும், வந்திருப்பவர்களிடமும் கூறினான். இதைக் கேட்டதும் அனுசூயாவும், சங்கரியும் பாம்பை மிதித்ததுபோல் நடுங்கினார்கள்.

பெரிய குழந்தைகள் பயங்கரமாக விழித்துக் கொண்டு "எம்பா விஷம் சாப்பிட்டு சாகப்பாத்தே? ஐயயோ! நாம்ப குழம்பெ சாப்பிட்டு செத்துப்போயிருந்தா இப்ப எப்படி இருக்கும்?" என்று கூறினார்கள். மகாதேவன் குழந்தைகளை வாரி யணைத்து முத்தமிட்டான்.

# 20-வது அதிகாரம்

## உண்மை பக்தியும், உத்தமத் தொண்டும்

[அனுசூயாவின் மண்டல பூஜையின் மகிமையை நமது மோகினியின் மண்டல நாவலின் மூலமாக விளக்கினோம். 'மோகினி'யின் அன்பர்களுக்கு இச்சந்தோஷச் செய்தியை தெரிவிக்க வேண்டியே இதை கதையின் அத்யாயத் தொடக் கத்தில் எழுதுகிறேன். பார்த்தஸாரதியின் பரிபூர்ண கிருபா கடாக்ஷத்தினால், 'மோகினி'யின் வாயிலாகவும், அதன் இதர பிரசுரங்களின் மூலமாகவும் இதுபரியந்தம் வெளியான நாவல்கள் இதனுடன் ஒரு மண்டலம் ஆகின்றன. (அதாவது 40 புத்தகங்களாகின்றன.) இதுவே 40-வது நாவலாகையால், இதற்கு 'மண்டலம்' என்ற பெயரைச் சூட்டும் முறையில் கதைக்கே 'சந்திர மண்டலம் அல்லது அதிர்ஷ்ட மழை' என்ற பெயரைச் சூட்டினோம். இந்த சந்தோஷத்திற்கும், கடவுளின் கருணை மாரியினால் 'மோகினி'க்கென ஒரு சிறு அச்சாபீஸ் ஏற்பட்டு, அதிலேயே இந்த மண்டல நாவல் பூர்த்தியாகும் படியான அரிய பாக்கியம் ஏற்பட்டதற்கும் முதல் காரணம் 'மோகினி'யின் அன்பர்களின் அபாரமான பேருதவியேயாகும். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியறிதலையும், வந்தனத் தையும் தெரிவித்துக்கொண்டு, வெகு விரைவிலேயே பொன் விழா நாவலை (50-வது நாவலை) வெளியிடும்படியான ஊக்கத் தையும், உத்ஸாகத்தையும், சக்தியையும் எனக்குக் கொடுத்து என்றும் ஆதரிக்க வேண்டுமாய் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை வேண்டிக்கொண்டு, உங்களையும் பிரார்த்திக்கின்றேன்.

அனுசூயாவுக்கு பேனு முனையினால் அதிர்ஷ்ட மழை பொழிந்ததேபோல் நமது 'மோகினி'க்கு ஸ்ரீ எம்பெருமானின் பாத தூளியினால், கிருபா கடாக்ஷத்தினால், ஆசி மழை, அனுக்ரக மழை என்றும் பொழிய வேண்டுமாய் அவனடி தொழுது இறைஞ்சுகின்றேன். வை. மு. கோ.]

"அம்மா! அம்மா! நமக்காம்மா திடீன்னு லக்ஷ ரூபா வந்தது? ஆ! அதிஷ்டம் எனக்குதானேம்மா?" என்றது முதல் குழந்தை. "இல்லெம்மா! எனக்குதாம்மா அதிஷ்டம் வரும்னு நேத்திகூட குடுகுடுபாண்டி சொன்னும்மா!" என்றது மற்றொரு குழந்தை.

அனு :—கண்மணிகளே! நம்முடைய அதிர்ஷ்டமெல்லாம் ஒன்னுமே இல்லே. எல்லாம் ஏழை மக்களின் அதிர்ஷ்டம். பசிபாது சாப்பிடும் வரனே மட்டுந்தான் நான் பகவானேக் கோரினேன். அது கிடைத்தது.

பெரிய குழந்தை :—எம்மா! ஏழையின் அதிஷ்டம்னு பணத்தெ எல்லாம் எழெக்கி கொடுத்துடுவயா? எங்களுக்கு நல்ல துணிகள் நகைகள் ஒன்னும் பண்ணமாட்டே? நீ நல்ல புடவை உடுத்திக்க மாட்டே? வேறே வீட்டுக்குக் குடி போக மாட்டே?

அனு :—கண்ணே! இதெல்லாம் இருக்கட்டும். பசியின் கொடுமை நமக்குத் தெரிந்ததுபோல வேறெ யாருக்கும் தெரியாது. அந்த மாதிரி பசியோடெ எத்தனே ஜனங்கள் சாகிறு தெரியுமா? அவாளுக்கெல்லாம் நாம் தினம் சாதம் போட்டா நமக்கு புண்ணியம் வரும். கடவுளுக்கு நம்மமேல் அதிக ஆசெ வரும். இன்னும் பணம் குடுப்பார். தெரிஞ்சுதா?

குழந்தை :—அப்படின்னு நாம்ப இப்படியேதான் இருக்கணுமா?

அனு :—இல்லெம்மா! நாமும் கொஞ்சம் சந்தோஷமா இருக்கலாம். அதோ பாரு. யார் யாரோ வரா; சமத்தா இருங்கோ....“ வாருங்கள்; என்ன சமாச்சாரம்? இது சின்ன இடம்; தயவு செய்து பாயிலே உட்காருங்கள்.”

ஒருவன் :—அடாடா! அதிர்ஷ்டம்னு இதுவன்னே அதிர்ஷ்டம்! மழை மாதிரின்னு பேஞ்சுட்டுது! ஏதோ அம்மன் கிருபையில் நன்னு இருக்கணும். நான் ஓர் கைங்கரிய பித்தன். மின்னிபுரத்து கோவில் ஜீரணமாய்விட்டது. கோயில் கைங்கரியம் நடக்கணும். இவ்விடத்து மனசெப் பக்தி பெரியவா ரொம்ப ரொம்ப சொல்லி இருக்கா! தாங்கள்தான் அந்த கோவிலே உத்தாரணம் செய்யணும்.

அனு :—(நகைத்துக்கொண்டே) ஸ்வாமி! தாங்கள் படித்து சாஸ்திரமறிந்த பரம பண்டிதராக இருக்கலாம். நான் கேவலம் மூடம். இருந்தாலும், கடவுள் கல்லால், மண்ணல் கட்டிய கோயிலுக்குள்ளே மட்டுந்தான் இருக்கிறர் என்றது எனது நம்பிக்கை இல்லே. “தூணிலு யிருப்பன்; துரும்பிலு மிருப்பன்” என்ற பிரக்லாதனின் வாக்குப்படி, அவன் இல்லாத இடமே இல்லே என்பதுதான் என் நம்பிக்கை. ஒவ்வொரு ஏழையின் இதயத்திலும் அவன் கோயில் கொண்டிருக்கிறன். அந்த கோயிலாகிய இதயத்தையுடைய ஜனங்களுக்கு கால் வயிறு கஞ்சி வார்த்தால் கடவுளுக்குக் கோயில் கட்டிய புண்ணியம் வரும் என்பதுதான் எனது துணிவு; அதுதான் கடவுளுக்கும் அத்யந்த ப்ரீதி. ஆகையால் அந்த கோயில்களுக்கு

நான் என்னுலானதைச் செய்ய உத்தேசம். இந்த கோயிலுக்கு வேறு இடம் பார்க்கலாம். ஸ்வாமிகள் மன்னிக்கணும்.

இதைக்கேட்ட ஸ்வாமி பதில் பேசாது எழுந்து முறைத்த படியே போய்விட்டார்.

இரண்டாவது :—அம்மணீ! நாங்களிருவரும் மோட்டார் கம்பெனி தரகர்கள். இவர் வீடுகள் வாங்கும், விற்கும் தரகர். உங்களுக்கு எந்த மாதிரி கார் வேணும்? எத்தனை பெரிய பங்களா வேண்டும்? தெரிவித்தால் உடனே வந்துவிடுகிறது.

மற்ருே :—நாங்கள் வைர வியாபாரிகள். எங்களிடம் இல்லாத நகை மாதிரிகள் உலகத்திலேயே இல்லை. இதோ பாருங்கள் (பெட்டியைத் திறக்கிருன்.)

மற்ருே :—அம்மா! நாங்கள் இந்தியாவிலேயே ப்ரபலமான ஸில்கு வ்யாபாரிகள். உங்களுடைய இஷ்டத்திற்கு உகந்த எல்லா ரகமும் எங்களிடம் கிடைக்கும்? இதோ சாம்பில் க்ளாத்.

வேருெருவன் :—அம்மணீ! எல்லாவற்றையும்விட இரும்புப் பெட்டி தற்போது நிரம்ப அவசியம். நாங்கள் அந்த வியாபாரி. எந்த சைஸில் தங்களுக்கு வேண்டுமோ?

போட்டோக்காரர் :—அம்மணீ! நீங்கள் தயவு செய்து குடும்பத் துடன் இப்படி நில்லுங்கள். ஒரு நிமிடம் படம் பிடித்துவிடுகிறேன். (காமிராக்களை தூக்கிக்கொண்டு இன்னும் சிலர் நிற்கிருர்கள்.)

பேப்பர்காரர் :—அம்மணீ! உங்கள் அனுபவத்தைப் பற்றி ஏதாவது ஸ்டேட்மெண்டு கொடுக்க வேண்டும். அதோடு உங்கள் ஜீவிய சரித்திரச் சுருக்கமும் வேண்டும்.

இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டு :—அம்மணீ! எங்கள் கம்பெனியைப் போன்ற சிறந்த கம்பெனியே இல்லை. அதிலேயே தாங்கள் இன்ஷூர் செய்யவேண்டும். இதோ எங்கள் புத்தகம்.

இரு வாலிபர்கள் :—அம்மணீ! நமஸ்காரம். நாளை 20-ந்தேதி எங்கள் வாலிப சங்கத்து ஆண்டு விழா. அதற்கு நீங்கள்தான் தலைமை வகிக்கவேண்டுமென்று கேட்க வந்திருக்கிருேம். சங்கத் திற்கும் ஏதாவது உதவி செய்யவேண்டும்.

பெரிய மனிதர் :—ரொம்ப சந்தோஷம். சந்திரபுரியில் இம் மாதக் கடைசியில் ஒரு தேசிய மகாநாடு நடக்கப்போகிறது. அதற்கு நீங்கள்தான் தலைமை வகித்து நடத்திக் கொடுக்க வேண்டும்.

ஏககாலத்தில் இதுபோல் இன்னும் பல யாசகர்களும், அழைப் பாளர்களும், வியாபாரிகளும் வந்து சூழ்ந்துகொண்டார்கள். அவர்களைப் பார்க்கும்போது அனுசூயாவுக்கு தாங்கமாட்டாத

நகைப்பும், ஆச்சரியமும் உண்டாகிவிட்டது. அவள் எல்லோருக்கும் சேர்த்து ஒரே வார்த்தையில் பதிலளிக்க எண்ணி,

"பெரியார்களே! நீங்கள் இத்தனை ச்ரமப்பட்டு என்னிடம் பேசியதற்கு மிக்க வந்தனம் செலுத்து கிறேன். நான் முன்பிருந்த அதே அனுசூயாதான். இனியும் அதே அனுசூயாதான். இந்த ஒரு லக்ஷ ரூபாயினால் எனக்கு ஏதோ தனித்த மதிப்பும், உயர்வும் வந்துவிட்டதாக நீங்கள் நினைப்பதுபோல் நான் நினைக்க வில்லை. என்றும் என் மதிப்பும் உயர்வும் ஒரே மாதிரி யாகத் தான் நினைக்கிறேன். ஆகையால் உங்களுடைய எந்த வேண்டுகோளையும் திருப்தி செய்ய தற்போது நான் அசக்தையாயிருக்கிறேன். என் மனத்திலுள்ள வைரமே என்றும் நிலைத்தால் போதும். என் இதயமாகிய இரும்புப் பெட்டியில் கடவுளின் பக்தியும், நம்பிக்கையு மாகிய போக்கிஷத்தை வைத்தால் போதும்.

என்றும் என் வீட்டில் நான் குழந்தைகளுக்குத் தலைவியாயிருந்தால் போதும். மற்றபடி எந்த சமயம் எது வேண்டுமோ அதை நான் அவ்வப்போது தெரி வித்துக் கொள்கிறேன். மன்னிக்க வேண்டும். நான் பரம ஏழை. உங்களுக்குக் கொடுக்க ஒரு கப் காபி கூட இல்லை. இதோ இந்த பழத்தில் ஒன்று வாங்கிக் கொள்ளுங்கள்."

என்றாள். எல்லோர் முகத்திலும் அசடு வழிந்தது. சிலர் பழத்தை வாங்கிக் கொண்டும், சிலர் சந்தடி செய்யாமலும் நழுவினர்.

அனுசூயாவின் ஆச்சரியம் கரை புரண்டது. எனினும் தன் பெற்றோரைப்பற்றி ஒரு தகவலும் தெரியாத குறை மட்டும் அவளை விட்டகலவே இல்லை. "இச்சமயம் அவர்கள் இருந்தால் எத்தனை ஆநந்தமாயிருக்கும்?" என்று நினைக்கும்போது கண்ணீர் விட்டாள்.

வெளியில் சென்றிருந்த மகாதேவன் "அனுசூயா!" என்று ஆவலாக அழைத்துக்கொண்டே ஒரு பெரிய மூட்டையுடன் வந்தான். "இது என்ன மூட்டை? செக்கை மாற்றியாய் விட்டதா?" என்றாள்.

மகா:—செக்கை பாங்கியில் கட்டி, 100 ரூபாய் வாங்கி, முதலில் உன்னிஷ்டப்படி நம் எல்லோருக்கும் கண்ணிய மான துருடையும், இன்றைய சாப்பாட்டிற்குச் சாமானும் வாங்கி வந்தேன்.—என்று மூட்டையை அவிழ்த்தான். குழந்தைகள் தமக்கு வேண்டிய உடைகளை வெகு ஆவலுடனும், பரபரப்புடனும்

எடுத்துப் போட்டுக் கொள்ளப்போனார்கள். உடனே அனுசூயா, "குழந்தைகாள்! பொறுங்கள். பொறுங்கள். அவசரப்பட வேண்டாம். அந்த பணத்தை முதலில் ஏழைகளுக்கு வினியோகித்த பிறகுதான் நாம் உபயோகிக்க வேண்டும். இதை அப்படியே ஏழைகளுக்குக் கொடுத்து விடுவோம். அத்தான்! இதுபோல் இன்னொரு செட்டு வாங்கி வாருங்கள்" என்றாள்.

அந்த உடைகளுக்கு மஞ்சள் தடவி கடவுளின் முன்பு வைத்து சேவித்து விட்டு கோயில் வாசலில் கிடக்கும் மொண்டி, முடம், குருடு முதலிய ஏழைகளுக்கு அந்த உடைகளைக் கொடுத்துவிட்டு வந்தாள்.

இப்போது சில மாதங்கள் ஓடி மறைந்துவிட்டன. ஓர் பெரிய மைதானமாயிருந்த இடத்தை அனுசூயா விலைக்கு வாங்கி அதில் தனக்கு ஒரு சிறிய வீடும், மற்றபடி ஏழைத் தொழிலாளர்கள் இருப்பதற்கு சின்ன சின்ன வீடுகளும், ப்ரம்மாண்டமான தொழிற்சாலைக்கு வேண்டிய வசதியுடன் இடமும் தயாராகி இப்போது சுமார் 500 பேர்களுக்குக் குறையாமல் ஆணும் பெண்ணுமாக வெகு ஆநந்தத்துடன் மகாத்மா காந்தியின் சக்தி வாய்ந்த சக்ராயுதம் போன்ற சர்க்காவில் நூல் நூற்கின்றார்கள்; சுமார் 20 தறிகள் ஓடுகின்றன. கதரில் அருமையான பூ வேலைகள் ஒரு புறம் நடக்கின்றன. பஞ்சு பதம் செய்வது முதல், கதர்விற்கும் வரையில் வெகு ஒழுங்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

"காந்தி கைத்தொழில் கழகம்" என்ற பெயருடன் இந்த ஸ்தாபனம் தினே தினே சந்திரனைப்போல் ப்ரகாசித்து இந்தியா முழுதும் பரவி விட்டது. அனுசூயாவும், மகாதேவனும் தினம் இத் தொழிற்சாலையைப் பார்வையிடுவதோடு போகாமல், இருவரும் நூல் நூற்றுவிட்டுச் செல்லும் காட்சி தொழிலாளிகளின் உத்ஸாகத்தைக் கிளப்பியது.

அதேபோன்று "அங்கஹீனர்களின் ஆதரவு நிலையம்" என்ற பெயருடன் மற்றொரு ஸ்தாபனத்தையும் ஏற்படுத்தினாள். அதில் மொண்டி, முடவன், கூனு, குருடு; வியாதியால் பீடிக்கப் படுகிறவர்கள், உழைத்துச் சாப்பிட முடியாத கிழங்கள் முதலியவர்களை சம்ரக்ஷித்து, அவர்களிலும் காலில்லாதவர் கையினால் செய்ய முடிந்த வேலைகளைச் செய்யவும், கையில்லாதவர் காலால் செய்ய முடிந்ததையும் இப்படி ஆளுக்குத் தக்கபடியே வேலைகளைக் கொடுத்து அவர்களுக்கு பொழுது போக்கிற்கானபடிச் செய்து வந்தாள். கண்ட பிச்சைக்காரர்களையும் சேர்த்து சோம்பேறி மடமாக்காமல் நடத்தும் இந்த புதிய ஸ்தாபனத்தைக் கண்டு எல்லோரும் வியந்தார்கள்.

ஒரு தினம் ஒரு கிழவரும், கிழவியும் வந்து தாமும் இந்த கைத்தொழிற்சாலையில் நூல் நூற்பதாகவும், வேலை தரவேண்டு மென்றும் கேட்டார்கள். கைத்தொழிற்சாலைக்கு சாரதாவின் புருஷனே மானேஜர்; அவளே மேற்பார்வை செய்யும் சூபர்வைஸர். இந்த கிழவர்களை சாரதா எஜமானியம்மாளிடம் சிபார்சு செய்ய அழைத்துச் சென்றாள்.

அச்சமயம் அனுசூயா, தன் தாய் தந்தையரின் படத்திற்கு முன்பு நின்று "ஆ! நீங்கள் மறைந்து இன்று சரியாக 7 வருடங்கள் முடிந்து விட்டனவே? என் முன்னறி தெய்வங்களாகிய நீங்கள் எங்கிருக்கிறீர்களோ! என்ன தவிக்கிறீர்களோ! இனி நான் எப்போது உங்களைக் காண்பேன்?" என்று மனமுருகிக் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கையில், சாரதா அழைத்து வந்த கிழவர்கள் அந்த படத்தைப் பார்த்ததும் "ஹா! இது நம் படமாயிற்றே" என்று இருவரும் வியந்து அனுசூயாவை உற்றுக் கவனித்தார்கள்.

இதற்குமேல் கூறவேண்டுமா? "ஆ! இந்த கழகத்தின் எஜமானி எங்கள் அருந்தவ ராணியா? என் கண்மணி அனுசூயா!" என்று கதறியவாறு அவளை வியக்கும்படி கட்டிக் கொண்டார்கள். அனுசூயா தன் பெற்றோர்களைக் கண்டதும் பேரானந்தக் கடலாடி, பாதத்தில் வீழ்ந்து வணங்கி, கண்ணீர் பெருக "அப்பா! அம்மா! இப்படித்தானா நீங்கள் மறைவது? ஐயோ! தினம் நான் தாமரை இலை நீர்த் துளிபோல் துடித்தேனே!" என்மீது கருணை இப்போதாவது பிறந்ததா?" என்றாள்.

சாரதா:—அம்மணி! இவர்கள் உங்கள் பெற்றோர்களா! அடாடா! என்ன ஆச்சரியம்! இவர்கள் இப்போதும் உங்களைத் தெரிந்துகொண்டு வரவில்லை. இங்கு வேலை கிடைக்குமாவென்று தான் வந்தார்கள்; நான் அழைத்து வந்தேன்.

பெற்றோர்:—அம்மா அனுசூயா! நாங்கள் அப்படி அன்று வைராக்யத்துடன் மறையா விட்டால் எங்களுக்கு இத்தனை யாத்திரை புண்ணியமும், ஸ்வாமி தரிசனங்களும், புண்ய நதி ஸ்நானங்களும் கிடைத்திருக்குமா? அதன் பலன்தான் உங்களை நாங்கள் மீண்டும் இந்த உச்ச நிலையில் கண்டு களிக்கிறோம். மகாதேவன் எங்கே?" என்றார்கள்.

பஞ்சாமிருதத்திற்கு வேண்டிய பண்டங்கள் ஒன்று சேர்ந்து விட்டால் அதன் ருசியைக் கேட்க வேண்டுமா? பஞ்சாமிருதத்தை விட அதிக மகிமை பொருந்தியதும், தேவர்களுக்கும் எளிதில் கிட்டாத தேவாமிருதமாயும், ஜீவாமிருதமாயும் அக்குடும்பம் இனித்தது. மகாதேவன் பரபரப்புடன் வந்தான்.

தாங்கள் இழந்து விட்ட பெரியார்களைக் கண்டு நமஸ்கரித்து விசாரித்தான். அதற்குள் அனுசூயா "சென்ற காரியம் எப்படி அத்தான்! அதை முதலில் சொல்லுங்கள்" என்றாள்.

மகா :—அனுசூயா! அச் செய்தி முற்றிலும் உண்மைதானும். பாசாங்கோ, சூதோ ஏதுமில்லையாம். மைனர் உண்மையிலேயே மனமுருகிக் கதறி கண்ணீர் வடிக்கிறார். 'அனுசூயா! அனுசூயா! என்னை மன்னிப்பாயா? எனக்கு கதி மோக்ஷமளிப்பாயா'வென்று கதறுவதை நானே மாறு வேஷத்தில் சென்றறிந்தேன். தான் செய்த அக்ரமங்களுக்கு வருந்துகிறான். பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது.

அனு :—அப்படியா! ஐயோ பாவம்! நாம் புத்தி வரும்படியாகச் செய்தது பலிதமே அடைந்தது. அம்மா! அப்பா! நாம் ஆதியில் சீரழிந்ததற்கும், இப்போது இந்த நிலைமையில் இருப்பதற்கும் மைனர்தானே காரணம். ஆதி விஷயத்தை மறந்து விடுவோம். சாரதாவின்மீதும், அவள் தாயார்மீதும் அவர் காரை ஏற்றியிரா விட்டால் நமக்கு இந்த தசை வருவதேது? குற்றம் செய்தவர் அதை உணர்ந்து வருந்துகையில், நாமும் கருணை காட்டா விட்டால் நமது ஜன்மத்திற்கும் தர்மத்திற்கும் அடுக்காது; ஆகையால் அவரைப் பார்த்துவிட்டே வருவோம். கிளம்புங்கள். சாகும் போதாவது மன நிம்மதியுடன் சாகட்டும் பாவம்." என்று தயாளத்தனத்துடன் கூறினாள்.

ராமலிங்கம் தம்பதிகளுக்கு இது பிடிக்கவில்லை எனினும் தங்கள் குமாரத்தியின் அபார குணத்தின் பெருமையைக் கெடுக்காது ஒப்புக் கொண்டார்கள். அன்றே அனுசூயா குடும்பத்துடன் பழ வகைகள் வாங்கிக் கொண்டு, மைனர் இருக்கும் கிராமத்துக்குத் தன் காரிலேயே சென்றாள். அனுசூயாவுக்குப் பழய கதைகள் கண் முன்பு தோன்றாமலில்லை. எனினும் தனக்கு பரம வேதனையை உண்டாக்கிய காகாசுரனுக்கு மோக்ஷமளிக்கும்படிச் சிபார்சு செய்த உத்தமத்தாய் சீதாபிராட்டியாரின் சிறந்த இனத்தில் பிறந்துவிட்டுப் பின் வாங்குவதாவென்று தேற்றிக் கொண்டு உள்ளே சென்றாள்.

அதே சமயம் மைனர் குழறிய வாயோடு, "மன்னுழு! அழ்த அம்மா வந்தா நானு என் தாயாழுபோழ கும்பிழுவேன்! தங்கழ்சிபோல பேசுவேன்" என்று கூறுவதைக் கேட்டுக்கொண்டே சென்ற அனுசூயா, "ஆ! இதோ வந்து விட்டேன். நீங்கள் சொல்வது ஆண்டவன்மீது ஆணையாக நிச்சயந்தானா?"....என்று கூறிக்கொண்டே அருகில் சென்று, அவன் படுத்திருக்கும் பலகைக்குச் சரியாக மண்டியிட்டுக் கொண்டு உட்கார்ந்தாள்.

மகாதேவன் பலகையின்மீதே உட்கார்ந்து மைனரின் தலையைத் தன் மடிமீது வைத்துக் கொண்டான்.

தம்பதிகளின் கண்ணில் தாரை தாரையாக நீர் பெருகு கிறது. ராமலிங்கம் தம்பதிகளுக்கும் மனம் கலங்கிவிட்டது. மைனருக்கு ஒரு கையை மட்டும் சற்று அசைக்கவும், தூக்கவும் முடியும். அவருக்கு இவர்களைக் கண்டதும் பொறுக்க முடியாத துக்கமும், ஆநந்தமும் பொங்கி விட்டதால் கண்ணீர் பெருகிய வாறு "ஹா....அனுசூயா !....மகாதேவா !....ராமலிங்கம் !" என்று வாய்விட்டுக் கத்தியபடியே தன் ஒரு கையால் அனுசூயாவின் கரத்தைப் பிடித்துக் கொண்டு "இது சத்தியம்....சத்தியம் நீதான் என் தாயார்....தாயார்" என்று கூறி, மேலே பேசமாட் டாது கண்ணை மூடி விட்டார்.

அனுசூயா தான் கொண்டு வந்த ஆரஞ்சுப் பழத்தை உரித்து ரஸம் பிழிந்து தன் கைகளால் மைனர் வாயில் வார்த் தாள். மைனர் அதைப் பருகிய பின் எல்லோரையும் பரிதாபகர மாகப்பார்த்தார்; பேச முடியவில்லை. கண்ணீரையும், புலம்பலையும், விம்மலையும் நிறுத்த முடியவில்லை. அனுசூயாவின் குழந்தைகள் இந்த காட்சியைக் கண்டு ஒன்றுமே புரியாது விழித்தார்கள்.

அனு:—ஐயா ! உமக்கு இத்தகைய நல்ல புத்தியைக் கொடுத்த கடவுளை வணங்கி பஜியும். மனிதர்களை ஸ்மரிக்க வேண்டாம். பாபப் பிண்டமாகிய மனிதரை ஸ்மரிப்பதும், பணத்தை ஸ்மரிப்பதும் பாபத்தையே மீண்டும் தேடுவதில் முடியும். பாபசம்ஹாரியான எம்பெருமானை ஆண்டவனை மனதார ஸ்மரித் தால் இம்மையின் பாபத்தைப் போக்கி, மறுமைக்கும் நன்மையை யளித்துக் காப்பான்.

மனித ஜென்மம் படைத்த ஒவ்வொருவரும் அறியவேண்டிய தத்துவம் இதுதான். இகபரசார்த்தகத்தில் மனத்தைச் செலுத் தும். ஐயா! நீர் புதிய புனர் ஜென்மம் எடுத்ததற்கு நான் மனமார அக் கடவுளை வணங்குகிறேன். நான் பழங் கதைகளை அடியோடு மறந்துவிட்டேன். நீரும் விரும்பினால், இங்கு தனி வாஸம் செய்யாமல் எங்களுடனேயே, குழந்தைகளைக் காட்டி இவர் களுடன் பொழுதைக் கழிக்கலாம்" என்று குயில்போல் கூறினாள்.

குருடனுக்கு கண் வேண்டுமாவென்றால் வேண்டாம் என் பானா? அவர் மனம் இசைந்ததைத் தெரிவித்தார். மன்னரு உள்பட எல்லோரும் இந்த தொழிற்சாலையில் குடியேறினார்கள். கடனாலும், வஞ்சக நேசரின் சூழ்ச்சியாலும் பறிபோனது போக மிச்சமுள்ள சொத்துக்களை மைனர் இந்த தொழிற்சாலைக்கே கொடுத்துவிட்டார். நல்ல வைத்தியமாகச் செய்ததில் சற்று

தள்ளாடி, தடிபிடித்து தத்தித் தத்தி நடக்கும் நிலைமை யடைந்தார். குழந்தைகளும் இவரை விடாது சுற்றிக் கொண்டிருக்கும்.

**வ**ருஷங்கள் சில ஓடி மறைந்தன. இன்று எங்கு பார்த்தாலும் மேள சப்தமும், குதூகலமும் தாண்டவமாடுகின்றன. கைத்தொழிற்சாலை வாழை, மாவிலை, கதர்க்கொடி முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. அத்தொழிற்சாலையில் வேலை செய்யும் ஊழியர்களில் 5 பேருக்கு கல்யாணம் ஜாம் ஜாமென்று நடக்கும் ஆநந்தமும், கூட்டத்தின் வைபவமும் கூற வேண்டுமா? ஆலைத் தலைவியும், தலைவனுமே இதற்கு முன்னின்று செய்கிறார்கள் என்றால் அவர்களின் சந்தோஷம் எல்லை கடந்தது. "அத்தான்! ஆனி மாதம் முப்பத்தொன்றும் தேதியான கடைசி நாள்—கல்யாண கோர்ட்டு சாத்தும் நாள்—இன்று தானே!".... என்று கூறி ஒரு மாதிரியாகக் கணவனைப் பார்த்தாள்.

"ஆம்! இன்றுதான். சென்ற பல வருடங்களுக்கு முன்பு இதே முப்பத்தியோராந் தேதியின் நினைவுகள் என் மனத்தில் ஜ்வலிக்கின்றன. இதற்கிடையில் எத்தனை முப்பத்தியோராந் தேதிகள் சென்றன. எத்தனை மாறுதல்கள்! எல்லாம் காலச் சக்கரத்தின் கோலம்! ஆ! அதோ பாரு. நம் சண்பகம் கல்யாண தம்பதிகளின் பின்னலுக்கும் உத்தரியத்திற்கும் முடி போடுகிறாள். என்ன ஆநந்தக் காட்சி!" என்று அந்த வைபவத்திலேயே மனம் லயித்து விட்டார்கள்.

**ரா**மலிங்கம் தம்பதிகளுக்கும், சங்கரிக்கும் இந்த நித்ய கல்யாண வைபவத்தைக் கண்டு உள்ளம் பூரிப்பதை விட வேறு சந்தோஷமும் வேண்டுமா?

183013

மங்களம்.

---

இரண்டாம் பதிப்பு வெளி வந்து விட்டது!

## அன்பின் சிகரம்

1,2273
7.14.
பக்திப் பெருக்கும், காதல் ரசமும் நிரம்பியது. உயிரினு மினிய உள்ளன்புடன் செய்த உபகாரத்தின் அருமையை அறியாத அன்பற்ற அலகையின் முடிவு என்ன?........

நான்கணு ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

எதிர்பாருங்கள் !                    எதிர்பாருங்கள் !

ஏற்கனவே தமிழ் படமாக வந்து எல்லோருடைய
மனதையும் கொள்ளை கொண்ட

# பாலயோகினி

இப்பொழுது தெலுங்கு படமாக
தயாராகிவிட்டது.

எமது மகத்தான ஆரம்ப விழாவை

## கிரௌன் டாக்கீஸில்

எதிர்பாருங்கள் !



உயர்தர நடிகர்கள் :

பேபி சரோஜா

கமலகுமாரி
(கனகதாரா புகழ்)

நாகராஜகுமாரி

ஆரணி சத்தியநாராயண

டைரெக்ஷன் :

கே. சுப்பிரமண்யம்
பி. ஏ., பி. எல்.

ஜி. ராமபிரம்மம்

போட்டோகிரபி :
கமால் கோஷ்

ஒலிப் பதிவு :
பி. கே. விச்வனுத்

எடிடிங் :
தர்மவீர்

— விவரங்களுக்கு : —

**தி மகாலக்ஷ்மி ஸ்டுடியோஸ் லிமிடெட்,**
110, ராயப்பேட்டை ஹைரோட், சென்னை.



தலை
வலிக்கு

Headaches

ஆஸ்பிரினை விலக்குங்கள்
இருதயக் கோளாறுகளையும்
விலக்குங்கள்




அம்ருதாஞ்சனை
உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது

அம்ருதாஞ்சன் லிமிடெட்.,

சென்னை கல்கத்தா பம்பாய்

Printed & Published by V. M. Parthasarathy
at "Jaganmohini" Press, 26, Car St, Triplicane, Madras.